நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 422839, 434238

தினபதி
ரூ 3/50
THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA
DINAPATHI இல 6529 1990 மார்ச் 3 சனிக்கிழமை ★ ★ ★ தினபதி
செய்தி இதழாக பதிவு பெற்றது

பொதுசன நூலகம்
உடனுதவும்
25-3-1990
யாழ்ப்பாணம்

தூய்மையான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238

# தனி ஈழ தீர்மானம் பற்றி

# வரதர்–ஆளுநர் சந்திப்பு

## பாதுகாப்பு செயலாளர் முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை

திருகோணமலை, மார்ச் 2

தனி ஈழத் தீர்மானம் தொடர்பாக வடக்கு கிழக்கு முதலவர் திரு. அ. வரதராஜப் பெருமாளை, ஆளுநர் லெப்டினண்ட் கேணல் நளின் செனவிரத்ன நேற்றுக் காலை சந்தித்தார். இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினண்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்றுக்காலை திருகோணமலையில் முப்படைத் தளபதிகளுடன் நிலைமைகளை ஆராய்ந்தார்.

"ஈழ ஜனநாயக குடியரசு" தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை; ஸ்ரீலங்கா அரசு ஈ பி ஆர் எல் எப்பின் 19 நிபந்தனைகளையும் நிறைவேற்றினால், நிலைமை மீள் பரிசீலனை செய்யப்படும்" என்று முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாள், தம்மைச் சந்தித்த வடக்கு – கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் லெப்டினண்ட் கேணல் நளின் செனவிரத்னவிடம் அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கிறார்.

நேற்றுக் காலை சுமார் 9–45 மணியளவில் ஆளுநர் லெப்டினண்ட் கேணல் நளின் செனவிரத்ன, திருகோணமலையில் இயங்கும் மாகாண சபையின் செயலகத்திற்குச் சென்றார்.

அங்கு முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாளோடு சுமார் அரை மணி நேரம், அதாவது 10–45 மணி வரை கலந்துரையாடினார்.

தாம் நேற்று முன்தினம் மாகாண சபைக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் செய்வதற்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் போராளிகளை திருப்பி அனுப்ப வேண்டும்

—சிதம்பரம்

திருச்சி மார்ச் 2

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகளை இலங்கைக்கே திருப்பி அனுப்ப வேண்டும்– தமிழ் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால் இது ஒரு அவசர கட்டாயமாகும்–

இப்படி இந்திரா காங்கிரஸின் முன்னாள் உள்துறை இணை அமைச்சர் பி சிதம்பரம் எம் பி மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறார்–

இவர் தொண்டி மற்றும் இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகளுக்கு விஜயம் செய்துவிட்டு கடந்த திங்கள் இரவு திருச்சி வந்து

(2 ஆம் பக்கம் பார்க்க)

## சோமண்ணை



துறைமுகம் பெரிய களஞ்சியம் மாச்சே! எலிகளுக்கா குறைச்சல் இருக்கும் பாருங்கோ.

## மலையக அமைதி பாதயாத்திரை

### இன்று காலை ஆரம்பம்

கண்டி, மார்ச் 1

மலையக மக்கள் மத்தியில் சமாதானம், ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றை உருவாக்கும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு கண்டியில் இருந்து சிவனொளிபாத மலை வரையிலான பாத யாத்திரை ஒன்று ஆரம்பமாகிறது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் கண்டி பொலீஸ் அதிபர் திரு பி எம் லியனகே, சர்வோதய தலைவர் திரு ஏ ரீ

(2 ஆம் பக்கம் பார்க்க)

## 4 மணி நேரத்தில் பைக்கட் பால்

கொழும்பு, மார்ச் 2

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பால் பைக்கட்டுகள், பாடசாலைக்கு கிடைத்த 4 மணி நேரத்துக்குள் மாணவர்களிடம் விநியோகிக்கப்பட வேண்டும்.

அந்தப் பாலை உற்பத்தி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ரூ. 27 லட்சம் பெறுமதியான சட்ட விரோத வெளிநாட்டு பணம் கைப்பற்றப் பட்டது

கொழும்பு, மார்ச் 2

சுங்க அதிகாரிகள் நேற்று வெளிநாட்டவர் மூவரிடம் இருந்து 27 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டுப் பணத்தைக் கைப்பற்றினர்.

இலங்கைக்கு தங்கத்தை கடத்தி வந்து அவற்றை விற்றே அவர்கள் இந்தப் பணத்தை பெற்றுள்ளனர் என பிரதம சுங்க சேகரிப்பாளர் திரு லலித் ஹின்கம தெரிவித்தார்.

இந்த மூவருக்கும் 81 லட்சம

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் திணைக்களத்தால் மேலும் 2 கட்சிகள் அங்கீகரிக்கப்பட்டன

கொழும்பு, மார்ச் 2

தேர்தல் திணைக்களம் புதிதாக மேலும் இரண்டு கட்சிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, தொழிலாளர் தேசிய சங்கம் என்பனவே இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசியல் கட்சிகளாகும்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பு சபை மே மாதம் உருவாகும்

திருகோணமலை மார்ச் 2 —வரதர்

எதிர்வரும் மே மாதம் 5

## ஆயுதக் கோஷ்டி கடத்திய பொறியியலாளர் பொலீஸில் கண்டுபிடிப்பு

## இந்திய மாநில தேர்தல்களில்

திருகோணமலை மார்ச் 2

எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நாம் ஒன்று கூடி அரசமைப்பு சபையை உருவாக்குவோம்—

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாள் இப்படித் தெரிவித்தார்—

முதலமைச்சர் திரு அ வரதராஜப் பெருமாள் நேற்று திருகோணமலையில் உள்ள தமது பங்களாவில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்— அதில் மேற்கண்டவாறு சொன்னார்—

அவர் மேலும் தெரிவித்ததாவது

(2 ஆம் பக்கம் பார்க்க)

—வரநர்

வடக்கு கிழக்கு மாகாண

# அமைச்சர் யூசுப் கம்யூ. பதவி இழப்பார்

கொழும்பு, மார்ச் 2

வடக்கு – கிழக்கு மாகாண சபையின் போக்குவரத்து, கைத்தொழில் அமைச்சரான ஜனாப் அபூ யூசுப், தனது இலங்கை கமயூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பதவியை இழப்பார்.

இக்கட்சியின் மத்திய நிர்வாக கமிட்டி இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

இக்கட்சியில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதாயின் தமது கருத்தை தெரிவிக்க வேண்டும் என்று இலங்கை கமயூனிஸ்ட் கட்சி, ஜனாப் அபூ யூசுப்பை கடிதம் மூலம் கேட்டிருந்தது.

ஆனால் ஜனாப் அபூ யூசுப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய மாநில தேர்தல்களில்

# வலதுசாரி பாரதிய ஜனதா கூடுதல் இடங்களில் வெற்றி

## 2 மாநிலங்களில் ஆட்சி அமைக்க வசதி

### பாண்டிச்சேரியில் தி. மு. க. மஹாராஷ்டிரத்தில் இ. காங்.

புதுடில்லி, மார்ச் 2

இந்தியாவில் ஏழு மாநிலங்களுக்கும் ஒரு யூனியன் பிரதேசத்திற்கும் நடத்தப்பட்ட சட்டசபைத் தேர்தல்களில் வலதுசாரி பாரதிய ஜனதாக் கட்சி கூடுதல் இடங்களில் வெற்றி பெற்று முன்னணியில் திகழ்கிறது.

தேர்தல் நடைபெற்ற 1610 தொகுதிகளில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட 1337 முடிவுகளில் பாரதிய ஜனதாக் கட்சி 457 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

பிரதமர் வி பி சிங்கின் ஜனதா தள் 351 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

ராஜீவ் காந்தியின் இந்திரா காங்கிரஸ் 339 இடங்களைப் பெற்று மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இதன் மூலம் பாரதிய ஜனதா கட்சி இமாசல் பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும் மாநில அரசை அமைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனதா தள் ஒரிஸ்ஸாவில் ஆட்சியை அமைக்கக் கூடியதாக வெற்றி பெற்றிருக்கிறது. பீஹார், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களிலும் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டரசாங்கங்களை அமைப்பதற்கான வாய்ப்பை அது பெற்றிருக்கிறது.

இந்திரா காங்கிரஸ் மஹாராஷ்டிர மாநிலத்தில் மட்டுமே அதிகப் பெருமபான்மையைப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸில் கண்டுபிடிப்பு

கொழும்பு. மார்ச் 2

சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் ஆயுத கோஷ்டியொன்றினால் கடத்திச் செல்லப்பட்ட ஓய்வு பெற்ற அரசாங்க பொறியியலாளர் ஒருவர் கொஹுவலை பொலீஸ் நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்டார்,

இவர் கல்கிசை குடியிருப்பில் இருந்து திடீரென கடத்திச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து இச் சமபவம பொலீஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது, பொலீஸ் மா அதிபர், விசாரணை நடத்துமபடி உத்தரவிட்டார்,

(2 ஆம பக்கம பார்க்க)

# பல்கலை: மாணவி கடத்தப்பட்டார்

கொழும்பு மார்ச் 2

கொழுமபு பல்கலைக்கழக வர்த்தக பீட மாணவி ஒருவர் ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் கடத்திச் செல்லப் பட்டார்—

பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்வது தொடர்பாக ஆராயும கமிட்டிக்கு இப்படி முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது—

எம எஸ் பி முத்துநாயக்க என்ற இந்த மாணவி கடந்த வெள்ளியன்று மாவத்தகம, ஒக்னேகட பகுதியில் வைத்து ஆயுதக் கோஷ்டியினரால் கடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்—

இந்த மாணவி குறித்து இதுவரை எவ்வித தகவலும கிடைக்கவில்லை என்று மேற்படி கமிட்டியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்— (ண-வ).

# ரூபா 7 கோடி 90 லட்சம் துறைமுக பண மோசடி

கொழும்பு மார்ச் 2

இலங்கை துறைமுக அதிகார சபையில் நீண்ட காலமாக இடமபெற்று வந்ததாகக் கூறப்படும 7 கோடியே 90 லட்சம ரூபா பணமோசடி குறித்து விசேஷ பொலீஸ் கோஷ்டியினர் விசாரணைகளை நடத்தியிருக்கின்றனர்—

இந்த விசாரணை அறிக்கை இன்னும ஓரிரு தினங்களில் ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசாவிடம கையளிக்கப்படும—

இலங்கை துறைமுக அதிகார சபையின் பொருட்களை கொள்வனவு செய்யும பிரிவிலேயே இந்த பணமோசடி இடமபெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது—

இந்த மோசடி தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் இருந்து சகல விவரங்களும தெரியவந்திருக்கின்றன என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

உள்ளூர், வெளியூர் பொருட்களை கொள்வனவு செய்வதி

(2ஆம பக்கம பார்க்க)

# 12 ஊழியர்களுக்கு ஜாப். சிறப்புபயிற்சி

கொழும்பு, மார்ச் 2

தொழில் பயிற்சி பெற்ற மற்றும ஓரளவு தொழில் பயிற்சி பெற்ற கொழும்பு டொக்யார்ட் நிறுவன 12 ஊழியர்கள் ஜப்பானில் சிறப்புப் பயிற்சி பெறுவார்கள்.

இவர்களுக்கு ஜய்கா எனப்படும ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு நிறுவனம புலமைப்

(2 ஆம பக்கம பார்க்க)

# ஆயுதக் கோஷ்டியினால் திருமலை: வங்கி கொள்ளை

திருகோணமலை மார்ச் 1

ஆயுதக் கோஷ்டி ஒன்று திருகோணமலை இலங்கை வங்கிக் கிளையில் இருந்து ஒரு லட்சத்து ஓராயிரத்து 453 ரூபாவை கொள்ளை அடித்துச் சென்றது—

நேற்றுக்காலை நிகழ்ந்த இக் கொள்ளைச் சமபவம பற்றித் தெரிவிக்கப்படுவதாவது—

கடற்படை முகாமில் இருந்து வங்கிக்கு தேவையான பணத்தை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்களும, திருகோணமலை பொலீஸாரும கூட்டாக எடுத்து வந்தனர்—

வங்கி வாசலில் பொலீஸ் ஜீப் நிறுத்தப்பட்டது— மற்ற ஜீப் வங்கிக்குப் பணத்தை எடுத்து செல்வதற்கு வசதியாக வங்கி வளவுக்குள் சென்றது—

(2. ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# மேலும் 6000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த திட்டம்

## — செல்லச்சாமி

பதுளை மார்ச் 2

அரசாங்கம் மேலும் 6000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் திரு எம் எஸ் செல்லச்சாமி இதனைத் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு போக்குவரத்து வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவ மாணவர்களுக்கிடையில் ஊவா மாகாணத்தில் வரைதல் போட்டிகளும், பேச்சு போட்டிகளும் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

ஊவா பிராந்திய போக்குவரத்து சபை ஒழுங்கு செய்திருந்த மேற்படி வைபவத்தில் அமைச்சர் திரு செல்லச்சாமி தொடர்ந்து கூறியதாவது.

53,000 தொழிலாளர்கள் கடமையாற்றும் போக்குவரத்து சபையில் 3000 பஸ்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்து சபை பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கவேண்டிய நிலையில் உள்ளது.

சபை நட்டத்தில் இயங்கி வருவதனால் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என ஆலோசனை கூறப்படுகிறது.

அப்படிச் செய்தால் வேலையில்லா பிரச்சினை மீண்டும் எழும் எனவேதான் பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நாம் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

அதற்கமைய மேலும் 6000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

தொழிலாளர்கள் பஸ்களை தமது சொந்த உடைமைகளைப் போல் பாவிக்க வேண்டும். போக்குவரத்துச் சபையின் மூலம் தான் உங்கள் குடும்பம் வாழ்கின்றது என்பதை மறத்தலாகாது.

இவ்வாறு செல்லச்சாமி கூறினார்.

ஊவா மாகாண சபை போக்குவரத்து அமைச்சர் திரு ஆர் எம் ரட்னாயக்க பேசும் போது கூறியதாவது.

போக்குவரத்துச் சபை நடத்திய போட்டிகளில் ஊவா பிராந்திய போக்குவரத்துச் சபை சாரதி முதல் பரிசை பெற்றது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன் எனக் கூறினார்.

பாடசாலை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இலவச "சீசன் டிக்கட்" வழங்குவுள்ளதாகவும் திரு செல்லச்சாமி தெரிவித்தார்.

மற்றும் திருவாளர்கள் ஜயதிலக குணவர்தன, உபாலி சமரவீர வர்சகோன் (எம் பி) அதுல ஜயதிலக ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

(இ-037)

---

## அமைச்சர் யூசுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கடிதத்துக்கு பதில் எழுதத் தவறி விட்டார். இதனையடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு கே பி சில்வா தெரிவித்தார்.

ஈ பி ஆர் எல் எப் இயக்கமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் செய்து கொண்ட ஒரு உடன்படிக்கையின்படியே கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதிநிதியாக ஜனாப் அபூ யூசுப் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ண-வ)

---

## கொழும்பு மாவட்ட நீதிபதி நியமனம்

கொழும்பு, மார்ச் 2

மேலதிக கொழும்பு மாவட்ட நீதிபதி பி விஜேரத்ன கொழும்பு மாவட்ட நீதிபதியாக பதவி ஏற்றுள்ளார்.

இப் பதவியை வகித்து வந்த நீதிபதி ஜே பி உனாம்புவ மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றுள்ளதை அடுத்தே அவரது இடத்துக்கு நீதிபதி பி விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் மேலதிக நீதிபதியாக சிலாபம் மாவட்ட நீதிபதி உபாலி அபேரத்ன பதவியேற்றுள்ளார்.

(இ-032)

---

## மேலும் 2....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி தற்சமயம் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 27 ஆகும் என்று தேர்தல் ஆணையாளர் திரு சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட புதிய கட்சிகள் பற்றிய விவரம் விரைவில் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று திரு சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார். (ண-வ)

---

## ரூபா 7 கோடி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லேயே பெரும் மோசடி இடம் பெற்றிருக்கிறது. [illegible] நடவடிக்கைகளில் புலர் சம்பந்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

இதேவேளை நீண்டகாலமாக நிகழ்ந்ததாகக் கூறப்படும் இந்த மோசடிகளை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளன.

துறைமுக பாதுகாப்புச் சேவைக்குப் புறம்பாக [illegible] இங்கு பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

(ண-வ)

---

## தமிழ்ப் போராளி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்ந்தார்.

திருச்சியில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய அவர் கூறியதாவது.

இராமநாதபுரத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார் பொலிஸ் நிலையம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்திற்கான பொறுப்பை ஏற்க குறைந்தபட்சம் தமிழ்நாடு உள்துறை அமைச்சரோடு சம்பந்தப்பட்டவர்கள் உள்துறை அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் கருணாநிதியைக் குறிப்பிடுகிறார். பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும். அவரது உள்துறை அமைச்சிலுள்ள அதிகாரிகளையாவது இடமாற்றம் செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டில் எதிர்காலம் இருள் மண்டியதாகவே இருக்கும் என எதிர்பார்க்கிறேன்.

இலங்கையில் இருந்து வரும் தமிழ் அகதிகளை பராமரிக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையில் கவனிக்க வேண்டும். அதேவேளை தமிழ் போராளிகள் தமது கோபதாபங்களைத் தீர்க்கும் யுத்தகளமாக தமிழ் நாட்டை மாற்றுவது குறித்து மத்திய அரசு எவ்வித இரக்கமும் காட்டக் கூடாது.

தமிழ் நாட்டை யுத்த களமாக மாற்றுவதை அனுமதிக்கக் கூடாது. தமிழ் போராளிகளைத் திருப்பி அனுப்பவும் அவர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்கவும் மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை நடுக்க வேண்டும்.

---

## அரசமைப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது.

...இனிமேல் நாங்கள் தன்னாதிக்கமும், இறைமையும் கொண்ட தேசிய அரசு பேரவை உறுப்பினர்களாகச் செயல்படுவோம்.

1991 ஆம் ஆண்டு முதலாம் திகதிக்கு முன்னர் ஏற்கனவே சமர்ப்பித்த 19 கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும். இல்லாவிடில் நாம் ஈழப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவோம்.

இன்று காலை ஆளுனர் என்னைச் சந்தித்தார். எமது நிலைபாடு பற்றியும் வடக்கு, கிழக்கில் இருந்து படைகளை வாபஸ் பெறும்படி ஜனாதிபதியிடம் தெரிவிக்கும்படியும் அவரிடம் கூறினேன்.

வடக்கு, கிழக்கில் உள்ள சிறுகள மக்கள் பீதி இன்றி தமிழ் ஈழத்தில் வாழலாம். அவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும் உரிமைகளையும், சலுகைகளையும் வழங்குவோம்.

இப்படி அவர் சொன்னார்.

நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்து அவர் கூறியதாவது.

எனது கட்சி கட்டளையிட்டால் நான் எங்கும் செல்வேன் பிரசாரத்தை மேற்கொள்வேன் ஆயுதப் படைகளுக்கு பொறுப்பாக இருந்து செயல்படச் சொன்னால் அதனையும் செய்வேன்.

இலங்கை படைகளுடன் நாம் மோத மாட்டோம் அந்த சூழ்நிலையும் வராது.

வடக்கு கிழக்கில் நிர்வாகம் எந்தவிதமான தங்குதடையும் இன்றி தொடர்ந்து நடக்கும்.

இப்படி முதலமைச்சர் கூறினார்.

(ண-மு-283)

---

## 12 ஊழியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிசில் வழங்கியிருக்கிறது.

புலமைப் பரிசில்களை வழங்கும் வைபவம் கொழும்பில் நடைபெற்ற போது அதில் வர்த்தக, கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் இலங்கை முன்னேறி வருவதால் இவற்றின் எல்லா அம்சங்களிலும் பயிற்சி பெற்றவர்கள் நாட்டுக்குத் தேவைப்படுகிறார் என்று அவர் தமது உரையில் சுட்டிக்காட்டினார். இவ்விடயத்தில் நாட்டுக்கு உதவ முன்வந்த ஜப்பானுக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஜய்க்கா நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி ஹிடியோ யசுகி, டொக்யார்ட் நிறுவனத் தலைவர் திரு

---

## சமாதானத்தை வளர்க்கும் வகையில் புத்தாண்டு நிகழ்ச்சிகள்

## — ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 2

இவ்வாண்டு நாட்டில் இடம்பெறும் தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்ச்சிகள் நல்லெண்ணம், புரிந்துணர்வு, சகோதரத்துவம், சமூகங்களுக்கிடையிலான இணக்கம், அமைதி சமாதானம் ஆகிய பண்புகளை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

மாகாணங்களில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி ஏற்கனவே பிரதமர் டி பி விஜேதுங்க முதலமைச்சர்களுடன் கலந்துரையாடியிருக்கிறார்.

இதன் பொருட்டு வரையப்பட்ட மாகாண மட்ட புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்ச்சி நிரல்கள் உதவி அரச அதிபர்களிடம் கையளிக்கப்படும். உதவி அரச அதிபர்கள் இவற்றை நடைமுறைப்படுத்துவர்.

மேலும் இது தொடர்பான விவரங்கள் அடங்கிய கையேடொன்று தகவல் ராஜாங்க அமைச்சினால் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் பல புத்தாண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய பத்திரிகை நிறுவனங்கள் முன்வந்துள்ளன. புத்தாண்டு கொண்டாட்டங்கள் இம்மாதத்தில் இருந்தே கிராம அதிகாரிகள் பிரிவுகளில் ஆரம்பிக்கப்படும்.

(இ-032)

---

## மலையக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரியரத்ன ஆகியோரும், நகர பிரமுகர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்த பாத யாத்திரை ஆரம்பமாவதற்கு முன்னோடியாக நேற்று வெள்ளி இரவு கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் விசேட சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாத யாத்திரை விவரங்கள் வருமாறு—

3ஆம் திகதி காலை 7–00 முதல் காலை 8–00 வரை— கண்டி தலதா மாளிகை முன்பாக மகா விகாரையில் தங்குதல்.

4ஆம் திகதி காலை 7–00 மணிக்கு கம்பளையில் இருந்து பாத யாத்திரை தொடரும். இரவு 7–00 மணிக்கு நாவலப்பிட்டியை அடைதல்.

5ஆம் திகதி காலை 7–00 மணிக்கு நாவலப்பிட்டியில் இருந்து ஆரம்பம். இரவு 7–00 மணிக்கு நாவலப்பிட்டி அம்பகமுவ விகாரையை அடைதல்.

6ஆம் திகதி காலை 7–00 மணிக்கு யாத்திரை மீண்டும் ஆரம்பம். இரவு 7–00 மணிக்கு

---

## வலதுசாரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றிருக்கிறது. அருணாசல் பிரதேசத்திலும் அதற்கு அதிக இடங்கள் கிடைத்திருக்கின்றன.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் தி மு க அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற்று முன்னணியில் திகழ்கிறது.

புதிய அமைச்சரவையை அமைப்பதற்கான உரிமையை தி மு க தலைவர் திரு டீ ராமச்சந்திரன் கோரியிருக்கிறார்.

அவர் ஆளுநர் திருமதி சந்திரவதியை சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இந்தியாவில் 8 மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசத்துக்கும் கடந்த 27ஆம் திகதி சட்ட சபை தேர்தல்கள் நடைபெற்றன.

ஆனால் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் பணி இன்னும் முடிவடையவில்லை.

(ண-வ)

---

## இன்றைய திரைகளில்

6 வது வாரம்

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-30 6-00, 9-30

லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00

கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30, 6-00

பிரபு அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

இந்த மோசடிகளை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளன.

தலைமுக பாதுகாப்புச் சேவைக்குப் புறம்பாக ஸ்ரீலங்கா கடற்படையினரும் இங்கு பாதுகாப்புச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

(ண-வ)


## பெயர் மாற்றமும் மத மாற்றமும்

கொழும்பு-12, இலக்கம் 24/7 பேரா வீதி எனும் முகவரியில் வசிக்கும் கிருஸ்ணன் கடக்கர ஆண்டி பாலகிருஸ்ணன் ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை கிருஸ்ணன் பௌஸ் முகமட் என மாற்றியுள்ளேன் எனவும் எதிர்காலத்தில் சகல ஆவணங்களிலும் கிருஸ்ணன் பௌஸ் முகமட் என்றே கையொப்பமிடுவேன் என்றும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
கி பௌஸ் முகமட்
032456

**தினபதி சிறு விளம்பரம்**

### விற்பனைக்கு

டெலிகா டி 120 மொடல் விற்பனைக்கு- காலை 9 முதல் இரவு 10 மணி வரை பார்வையிடலாம்- ஏ எம் ரியால், 474/17, ? வது டிவிஷன், மருதானை, கொழும்பு-10.

032459


காட்டக் கூடாது.

தமிழ் நாட்டை யுத்த களமாக மாற்றுவதை அனுமதிக்கக் கூடாது. தமிழ் போராளிகளைத் திருப்பி அனுப்பவும் அவர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்கவும் மத்திய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அத்துடன் நின்றுவிடாமல் அவர்கள் மீண்டும் தமிழ் நாட்டுக்கு வந்திறங்குவதற்கும் இடமளிக்கக் கூடாது.

இப்படி சிதம்பரம் கூறினார்.

(ண)

## ஆயுதக்கோஷ்டி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்தர்ப்பத்தில் பிக்கப் வான் ஒன்று பிரதான வாசல் வழியாக வங்கி வளவுக்குள் நுழைந்தது. வானில் ஆறு நபர்கள் ஆயுதங்களுடன் இருந்தனர்.

அதில் இருந்து இறங்கிய ஒருவர் வங்கிக்கு முன்னால் நின்ற சப் இன்ஸ்பெக்டரை துப்பாக்கி முனையில் மடக்கினார். இதனால் ஏனைய பொலீஸ் உத்தியோகத்தர்கள் தடுமாற்றமடைந்தார்கள்.

இந்த திகில் சம்பவத்தை கண்ட வங்கி ஊழியர்கள் சத்தமிட்டுக் கொண்டு ஜீப்பில் இருந்த பணப் பைகளையும் டிரங் பெட்டியையும் வங்கிக்குள் எடுத்து சென்று கதவுகளை பூட்டிக் கொண்டனர். அவசரத்தில் எடுக்க முடியாமல் போன ஒரு பணப்பையை மாத்திரம் கொள்ளையர்கள் எடுத்துக் கொண்டனர்.

தமது முயற்சி முழுமையாக நிறைவேறாததைக் கண்ட கொள்ளையர் துப்பாக்கி முனையில் மடக்கப்பட்ட சப் இன்ஸ்பெக்டரையும் தமக்கு பாதுகாப்பாக பிக்கப் வானில் ஏற்றிக் கொண்டு சென்றனர். வழியில் சப் இன்ஸ்பெக்டரை இறக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.

வங்கி ஊழியர்களின் துரித நடவடிக்கையினால் கொள்ளையர்களிடம் இருந்து பல லட்ச ரூபா காப்பாற்றப்பட்டது என்று கூறப்படுகிறது.

(ண-மு-288)

...விக்கு பதிலளித்து அவர் கூறியதாவது.

எனது கட்சி கட்டளையிட்டால் நான் எங்கும் செல்வேன் பிரசாரத்தை மேற்கொள்வேன் ஆயுதப் படைகளுக்கு பொறுப்பாக இருந்து செயல்படச் சொன்னால் அதனையும் செய்வேன்.

## 4 மணி நேரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் மில்கோ நிறுவனம் கொழும்புப் பகுதியின் சகல பாடசாலைகளுக்கும் இப்படி ஆலோசனை தெரிவிக்கவிருக்கிறது.

பைக்கட்டில் அடைக்கப்படும் இத்தகைய பாலின் பாவனைக் கால எல்லை சாதாரணமாக 4 மணி நேரமாகும். அதற்கும் கூடுதலாக நேரத்துக்கு பாலை கெடாமல் வைப்பதாயின் குளிர் சாதனப்பெட்டியில் அவற்றை வைக்க வேண்டும்.

இப்படி மில்கோ நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு நிஹால்நந்த தினபதிக்குத் தெரிவித்தார்.

ஆனால் நாட்டின் பெரும்பாலான பாடசாலைகளில் குளிர் சாதனப்பெட்டி வசதி இல்லை, எனவேதான் 4 மணி நேரத்துக்குள் மாணவர்களிடையே பால் பைக்கட்டுக்களை விநியோகிக்கும் ஆலோசனையை முன் வைப்பது என்று முடிவு செய்யப்பட்டது என்றும் திரு நிஹால்நந்த மேலும் தெரிவித்தார்.

இந்த ஆலோசனை கால் நடை பராமரிப்பு, பால் உற்பத்தி ராஜாங்க அமைச்சர் திரு மகேந்திர விஜேரத்ன மூலம் கல்வி அமைச்சுக்கு உத்தியோக பூர்வமாக சமர்ப்பிக்கப்படும்.

கொழும்பு, நகர சபை எல்லைக்குள் உள்ள 166 பாடசாலைகளுக்கும் மில்கோ நிறுவனம் தினசரி ஒரு லட்சத்து 45 ஆயிரம் பால் பைக்கட்டுகளை விநியோகிக்கிறது.

கொழும்பு மாநகர சபை வாயிலாகவே இவை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

(ண-வ)

...சுட்டிக்காட்டினார். இவ்விடயத்தில் நாட்டுக்கு உதவ முன்வந்த ஜப்பானுக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் ஜய்க்கா நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி ஹிடியோ யசுகி, டொக்யார்ட் நிறுவனத் தலைவர் திரு டி டி பீரிஸ் ஆகியோரும் உரையாற்றினர்.

(ண-032)

## தனி ஈழ தீர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கில்லை என்று திரு வரதராஜப் பெருமாள் அவரிடம் விளக்கினார்.

தாங்கள் முன்வைத்திருக்கும் 19 நிபந்தனைகளையும் ஸ்ரீலங்கா அரசு நிறைவேற்றச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் மாகாண சபை அமைப்பு முறையை ஏற்றுக் கொள்வோம் என்றும் முதல்வர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது—

எமது இந்த நிபந்தனைகளை அரசு நிறைவேற்றாத பட்சத்தில், வடக்கு – கிழக்கிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் வெளியேற வேண்டும்.

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா அரசு இந்தியப் படையை எவ்வாறு வெளியேற்றுகிறதோ, அவ்வாறே இம்மாகாணத்திலிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விலக்கிக் கொள்ள வேண்டும் என நாம் ஜனாதிபதியை கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி திரு வரதராஜப் பெருமாள் எடுத்துரைத்தார்.

ஆளுநர் நளின் செனவிரத்ன திரு வரதராஜப் பெருமாள் தெரிவித்த விவரங்களை, ஜனாதிபதியிடம் எடுத்துரைப்பதாகத் தெரிவித்தார்.

வடக்கு – கிழக்கு மாகாண சபை வட்டாரங்களின் தகவலின் படி, ஆளுநர் நளின் செனவிரத்ன, நேற்று மாலை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவைச் சந்திக்கவிருந்தார்.

(ண-ங-288)

...தலதா மாளிகையில் விசேட சமய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாத யாத்திரை விவரங்கள் வருமாறு—

3ஆம் திகதி காலை 7-00 முதல் காலை 8-00 வரை— கண்டி தலதா மாளிகை முன்பாக பாத யாத்திரையில் ஈடுபடும் சகல இன மக்களினதும் சார்பாக சமயச் செய்திகளை வாசித்தல்.

முற்பகல் 9-40 மணிக்கு சமாதான பாத யாத்திரை ஆரம்பம். இரவு 7-30 மணிக்கு கம்பளையை அடைதல். அங்கு ரஜ...

5ஆம் திகதி காலை 7-00 மணிக்கு நாவலப்பிட்டியில் இருந்து ஆரம்பம். இரவு 7-00 மணிக்கு நாவலப்பிட்டி அம்பகமுவ விகாரையை அடைதல்.

6ஆம் திகதி காலை 7-00 மணிக்கு யாத்திரை மீண்டும் ஆரம்பம். இரவு 7-00 மணிக்கு நோர்டன் பிரிட்ஜ் விகாரையை அடைதல். அங்கு பாடசாலைகளில் தங்குதல்.

7ஆம் திகதி காலை 7-00 மணிக்கு பயணம் ஆரம்பம். இரவு 7-00 மணிக்கு யக்கம்ப தோட்டத்தை அடைதலும் தங்குதலும்.

8ஆம் திகதி காலை 7-00 மணிக்கு மாவுஸாகலையை நோக்கிப் பயணம். இரவும் 7-00 மணிக்கு மாவுஸாகலையை அடைதல். இரவு 8-00 மணிக்கு சமாதான நிலையத்தில் தியானம் செய்தல். இரவு 11-00 மணிக்கு சிவனொளிபாத மலையை நோக்கி நடத்தல்.

9ஆம் திகதி காலை 6-00 முதல் 6-30 வரை சிவனொளி பாத மலையில் ஏறியபின் சமாதான செய்தியை நாட்டுக்கு விடுத்தல்.

இந்த யாத்திரையின் போது தேவைக்கு ஏற்ற வகையில் நிகழ்ச்சிகளைத் தயாரித்துக் கொள்ளவும் புகுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(ண-மு-017)

## பொறியியலா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்டதைத் தொடர்ந்தே 57 வயதான இந்தப் பொறியியலாளர் கொஹுவளை பொலீஸில் வைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது, இதுபற்றித் தெரிவிக்கப்படுவதாவது—

தம்மை இராணுவத்தினர் என அடையாளம் காட்டிக்கொண்ட ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று இவரைத் தம்முடன் அழைத்துச் சென்றது, கண்கள் கட்டப்பட்ட நிலையில் அடையாளம் தெரியாத இடமொன்றில் இரண்டு நாட்களாக வைக்கப்பட்டிருந்த இவர் தீவிரவாதி என்று குற்றம் சுமத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

இதன் பின்னர் படையினர் இவரை கொஹுவளை பொலீஸில் ஒப்படைத்து விட்டு சென்று விட்டனர்.

அயல் வீட்டுக்காரருடன் இந்நபருக்கு காணித்தகராறு இருந்து வந்ததாகவும், இதன் பேரிலேயே இவர் கடத்திச் செல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் இவ்விடயம் பற்றி தெரிவித்துள்ள பொலீஸார் தீவிரவாதத் தொடர்பு கொண்டவர் என்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி கல்கிசைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ண-032)

## சட்ட விரோத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, 3500 டாலரை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முயன்ற இரண்டு இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

தங்கத்தை விழுங்கி அவற்றை கடத்திச் செல்ல முயன்ற ஒரு இலங்கையரும் நேற்று கைது செய்யப்பட்டார்.

(ண-ற)


லிடோ
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00

கிறனாடா
(பேருவளை)
10-30, 2-30, 6-00

பிரபு அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த

**பூ...**
**பூவா**
**பூத்திருக்கு**

(கலர்)

77 வது நாள்!

ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30

ரஜனிகாந்த்
(இரட்டை வேடம்)
ராதா - நதியா
நடித்த

**ராஜாதி ராஜா**

(கலர்)

82 வது நாள்!

ஜெஸிமா
(கிராண்ட்பாஸ்)
2-30, 6-00, 9-30

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

துசித
(பேராதனை)
10-15, 1-15, 3-30

நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-00

கார்த்திக் — குஷ்பு
வி.கே. ராமசாமி
நடித்த

**வருஷம் 16**

(கலர்)

# மறுபிறவியிலும் நடிகையாக பிறக்க ஆசைப்படுகிறேன் —ரேகா

அண்மையில் ரேகாவை சந்தித்து உரையாடிய போது கிடைத்த சில சுவையான தகவல்கள் இதோ:—

முதல் முதலாக நான் பார்த்த படப்பிடிப்பு "நெற்றிக்கண்" எங்கள் ஊரான மேட்டுப்பாளையத்தில் நடந்தது. ரஜனி - மேனகா நடிக்கும் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தார்கள்—

ஒன் - டு - த்ரி என்று சொன்னவுடன் உடனே திரும்ப! 'வேண்டும' என்று டைரக்டர் சொல்லிக் கொடுத்திருந்தார்.

இதையே பலமுறை சொல்லிச் சொல்லி அந்தக் காட்சியை படமாக்கிக்கொண்டிருந்தார்கள்.

"பூ" இவ்வளவுதானா என்று அன்று நினைத்தேன். படவுலகுக்கு நடிக்க வந்தபிறகு அதில் எவ்வளவு கஷ்டம இருக்கிறது என்று உணர்ந்தேன்.

சொல்லுவது யாருக்கும எளிது. செய்வது கடினம என்பதை எனக்கு நானே உணர்ந்தேன்.

"அவுட்டோர்" படப்பிடிப்பு நடக்கும இடங்களில் எனக்கு மிகவும பிடித்த இடம ஆந்திராவில் உள்ள விசாகபட்டினம. ராஜ முந்திரி, கேரளாவில் சாலக்குடி. என்னுடைய முதல் படமான "கடலோரக் கவிதைகள்" படப்பிடிப்பு விசாகப்பட்டினத்தில் நடந்தது.

கமலஹாசனுடன் இணைந்து நடித்த "புன்னகை மன்னன்" சாலக்குடியில் நடந்தது.

"சித்திரம" என்ற மலையாளப் படத்தில் நடிக்க எனக்கு முதலில் வாய்ப்பு தேடி வந்தது. "கால்—ஷீட்" பிரச்சினையினால் "சித்திரம" படத்தில் நடிக்க முடியாமல் போனது குறித்து வருத்தப்படுகிறேன்.



ரேகா

"சார்", "சூர்" எனக்கு வேஷம கொடுங்கள் என்று யாரையும கேட்டு தொல்லை செய்வதில்லை— இதற்காக தொலைபேசி மூலம தொடர்பு கொள்வதும இல்லை.

ஆனால் எனக்கு ஓர் ஆசை ரஜனியோடு நடிக்க வேண்டும. என்று.

திருமணத்திற்குப் பிறகு நான் நடிக்க மாட்டேன் என்று கூறி விட்டு, பிறகு நடிக்க வருவது அதன் பிறகு உள்ள பெயரையும - புகழையும இழப்பது போன்றவற்றை ஒருநாளும நான் செய்ய மாட்டேன்.

கணவருடைய அனுமதியை முன் கூட்டியே பெற்று திருமணத்திற்குப் பிறகும நடிப்பேன்.

மறு ஜென்மத்தில் நிறைய நமபிக்கை உண்டு எனக்கு. பாவம செய்தவர்கள் மீண்டும மனிதனாகப் பிறக்கிறார்கள். மறு பிறவியிலும நான் நடிகையாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.

எனக்கு வரும கணவர் என்னை விட அதிகம படித்தவராக (நான் - 1 படித்திருக்கிறேன்) உண்மை உள்ளவராக, எதற்கும சந்தேகப்படாதவராக என்னுடைய சந்தோஷத்திலும, துக்கத்திலும பங்கு கொள்ளுபவராக, அழகாக இருக்க வேண்டும அதற்காக அசடாக இருக்கக் கூடாது.

என்னுடைய பிறந்த நாளை (ஆகஸ்ட் - 28) பெரிய ஹோட்டலில் ஆடமபரமாகக் கொண்டாடுவதில்லை. எனக்கும என் தமபிக்கும பிறந்த நாள் ஒரே நாளில் வரும எனவே "கேக்" வெட்டி மிக எளிய முறையில் அக்கமபக்கம குடி இருப்பவர்களை மட்டும அழைத்து அவர்களோடு சந்தோஷமாக அன்றைய நாளை கழிப்பேன்.

சாரதா, ஷீலா, ஜெயபாரதி, சுகாசினி சபனா ஆஸ்மி, சுமிதா பட்டீல் போன்றவர்களைப் போல் சிறந்த நடிகையாக வரவும அப்படி வளரவும ஆசைப்படுகிறேன்.

— இவ்வாறு ரேகா கூறினார்.

(இ-10)



வரப்பு வெட்டி - வயல் திருத்தி - நீர் பாய்ச்சி - நெல் குவிக்க இளசுகள் இரண்டு இணைந்து

## மௌலவி பட்டமளிப்பு விழா

பேருவளை மார்ச் 1

காலி - கோட்டை "அல் பஹ்ஜத்துல் இப்றாஹீமிய்யா" அறபுக் கலாபீடத்தின் 21 ஆவது மௌலவிப் பட்டமளிப்பு விழா இன்று 3 ஆம திகதி மாலை, மேற்படி கலாபீட கேட்போர் கூடத்தில் இடமபெறும,

இவ்வைபவம அல்ஹாஜ் மாக்கான் மாக்கார் தலைமையில் நடைபெறும, இந்த விழாவில், தென் மாகாண ஆளுநர் அல்ஹாஜ் எம ஏ பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்,

இங்கு சுமார் 16 மௌலவி மாணவர்களுக்கு "பஹ்ஜி" பட்டமும, சான்றிதழ்களும வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

(இ-040)

## இலக்கிய போட்டி

திருகோணமலை மார்ச் 1

திருகோணமலை சர்வோதய இயக்கம பாடசாலை மாணவர்களுக்கும சமதி அங்கத்தவர்களுக்கும இடையில் கலை இலக்கியப் போட்டியொன்றினை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது—

நாடகம கவிதை சிறுகதை குறுநாவல் பேச்சுப் போட்டி விவாதப் போட்டி சங்கீதப் போட்டி நடனப் போட்டி வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன—

சகல போட்டிகளிலும வெற்றி பெறுபவர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும—

நாடக போட்டியில் சிறந்த நடிகர் சிறந்த நாடகப் பிரதி சிறந்த நெறியாள்கை ஆகியவற்றுக்கு தங்கப் பதக்கம வழங்கப்படும—

பரிசளிப்பு விழாவினை எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று மிக விமரிசையாகக் கொண்டாடுவதற்கு சர்வோதய இயக்கம நடவடிக்கை எடுத்து வருகிறது—

# தும்பு உற்பத்திக்கு புத்துயிர் அளிக்க 11 கோடி ரூபா

கொழும்பு மார்ச் 2

தும்பு ஆலைகளில் தும்பு உற்பத்திக்குப் புத்துயிர் அளிக்கப்படும—

இதற்காக பதினொரு கோடி ரூபாவைச் செலவிடவும நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது— தெங்குக் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் திரு சரத் சந்திர, ராஜகருணா இவ்வாறு கூறினார்—

தெங்குக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ஆறாயிரம தும்பு கைத்தொழில்களுக்குப் புத்துயிர் அளிக்கப்படும—

பிரிட்டிஷ் நிறுவனம ஒன்றுடன் சேர்ந்த புதிய தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு இளைஞர்களுக்கு இத்துறையில் தொழில் வாய்ப்புகளை வழங்கவும நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது—

இவ்வாறு திரு ராஜகருணா தெரிவித்தார்—

[இ—007]

## வர்த்தகர் வீட்டில் ரூ. $4\frac{1}{2}$ லட்சம் கொள்ளை

இனம தெரியாத ஆயுதக் கோஷ்டி ஒன்று முஸ்லிம வர்த்தகர் ஒருவரின் வீட்டினுள் நுழைந்து நாலரை லட்ச ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் - இரத்தினக் கற்கள் ரொக்கப் பணம ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றது—

இக் கொள்ளைச் சமபவம காலி கிந்தோட்டையில் நடைபெற்றது—

பொலீஸ் விசாரணையில் இருந்து தெரியவருவதாவது—

நால்வரைக் கொண்ட பிரஸ்தாப கோஷ்டி பயங்கர ஆயுதங்களுடன் வர்த்தகரின் வீட்டினுள் பிரவேசித்தது—

கோஷ்டியினர் தமக்கு உடனடியாக 10 லட்ச ரூபாவை கப்பமாக செலுத்த வேண்டும் என்றும இல்லாவிடில் கொலை செய்யப் போவதாகவும மிரட்டினர்—

வர்த்தகர் தன்னிடம காசு இல்லை என கூறினார்— இதனை அடுத்த அந்தக் கோஷ்டியினர் வீட்டில் இருந்த தங்க ஆபரணங்கள் - ரொக்கப் பணம இரத்தினக் கற்கள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர்—

(ண—மு)

## உரிமைகள் மீறலை ஆராய சந்தர்ப்பம் பெற்று தரவும்
### தினேஷின் கோரிக்கைக்கு சுதந்திரக் கட்சி பதில் தரவில்லையாம்

கொழும்பு, மார்ச் 2

விலைவாசி உயர்வு, ஜனநாயக உரிமைகள் மீறல் மாணவர் பிரச்சினை ஆகியவை தொடர்பாக

சர்வகட்சி அரசியல் முன்னணி ஒன்றை அமைப்பது தொடர்பாக அவரிடம பிரஸ்தாபிக்கப்பட்டது—

அவ்வாறான ஒரு முன்னணி

கைராஸ் இன்டர்நேஷனல்
டிரேவல்ஸ் & டுவர்ஸ்
புனித றமழானில்
உம்ரா யாத்திரை
1990
(இன்ஷா அல்லாஹ்)
கைராஸ் நிறுவனத்தில் இவ்வருடமும புனித நோன்பு மாதத்தில் உமராச் செய்ய ஏற்பாடுகள் செய்துள்ளோம—
கொழும்பு — ஜித்தா
ஜித்தா — மதீனா (விமானம மூலம)
புனித மதீனாவில் ஒரு ஜுமஆத் தொழுகையுடன் மூன்று நாட்கள் கழிக்கவும ஏனைய நாட்களுடன் புனித லெய்லத்தில் கத்ற் இரவு (நோன்பு 27) புனித நோன்புப் பெருநாள் ஆகிய தினங்களை புனித மக்காவில் கழிக்கவும ஏற்பாடுகள் செய்துள்ளோம— குளிரூட்டப்பட்ட தங்குமிட வசதிகளுடன் உங்கள் விருப்பம போல் இலங்கை சமையற்காரர்களை கொண்டு உணவு வசதிகளும செய்து தரப்படும—
உடன் தொடர்பு கொள்ளவும—
அல்ஹாஜ் எஸ் எச் சமூன் (ஜே பி)
(கைராஸ் குரூப் உரிமையாளர்)
கைராஸ் இன்டர்நேஷனல்



வரப்பு வெட்டி – வயல் திருத்தி – நீர் பாய்ச்சி – நெல் குவிக்க இளசுகள் இரண்டு இணைந்த விட்டன– இனி உற்பத்தி மட்டுமா அதிகரிக்கும்– (படம சத்தியவாக்கு) (பிரபு — தாரா)

# ருபினி நடிக்கும் "மயிலக் காளை"

செல்வகுமார் சினி ஆர்ட்ஸ் பாக்யராஜ் – ராதிகா, ருபினி நடிக்க "கொஙகு நாட்டு ராசா" என்ற படத்தை தயாரித்தத.

இந்தப் படத்தை டைரச்ட் செய்தவர் கோலப்பன் கே தூக்கா. எஸ் அனுசூயாதேவி தயாரித்தார்கள்

கோலப்பன் கதை, திரைக் கதை எழுதி டைரக்ட் செய்ய "மயிலக்காளை" என்ற பெயரில் புதுப்படம ஒன்று தயாராகிறத.

தினபதி சினிமா

இதை அனிதா சினி ஆர்ட்ஸ் சார்பில் ஜி அகஸ்டின் தயாரிக்கிறார். மோகன் – ருபினி ஜோடியுடன், சந்திரசேகர், எஸ் எஸ் சந்திரன், மனோரமா, கோவை சரளா நடிக்க, சஙகர்–கணேஷ் இசை அமைக்க. என் கே விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்கிறார். (இ-10)



ருபினி

# சாத்தான் உதவியுடன் அதிசய கப்பலி ல் சாகசம்

குக்கூ பிலிமஸ் பிரமாண்ட அரஙகுஙகள் அமைத்து "சாத்தான் சொல்லை தட்டாதே" என்ற படத்தை உருவாக்கி வருகிறத. படத்தின் உச்ச கட்ட காட்சிகள் படம ஆக்கப்பட்டன.

படத்தில் பெயருக்கு ஏற்ப தந்திர காட்சிகளும, அத்துடன் காதல், மெய்சிலிர்க்கச் செய்யும மோதல்களும இடமபெறுகின்றன.

கதாநாயகியான கனகா மீது காதல் வலை விரித்தனர் நண்பர்களான மூவர். (பாண்டியன். சந்திரசேகர், ஜனகராஜ்). அனால் கனகா விழுந்தது பாண்டியன் விரித்த வலையில்!

இந்த நிலையில் கனகாவை வில்லன் இளவரசன் காரில் கடத்திச் செல்ல நண்பர்கள் மூவருமு ஒன்ற சேர்ந்த மீட்கும முயற்சியில் இறஙகினர்.

இதற்கு நினைத்ததை நினைத்த போது அபூர்வ சாகசஙகள் செய்ய முடிக்கும சாத்தான் (செந்தில்) உதவிக்கு வந்தான்.

வானத்தில் பறக்கும. தண்ணீரை கிழித்து பாயும. மாட மாளிகை படிக்கட்டுகளில் ஏறும. இறஙகும.

இந்த கப்பலில் நண்பர்கள் மூவருடன் கனகாவின் தந்தை எஸ் எஸ் சந்திரனையும ஏற்றிக் கொண்டு, கப்பலை முடுக்கினான் சாத்தான்.

போக்குவரத்து மிகுந்த சென்னை அண்ணாசாலை உட்பட பல இடஙகளில் அதிசய கப்பலில் சாத்தான் சாகசம புரியும காட்சிகள் படம ஆக்கப்பட்டன.

விரைவில் திரைக்கு வரும "சாத்தான் சொல்லை தட்டாதே" படத்தில் கோவை சரளா மற்றும பலர் நடிக்க புலவர் புலமைப்பித்தன் பாடல்கள் எழுத, சஙகர் - கணேஷ் இசை அமைக்க. கதை வசனம ஜீ கே எழுதுகிறார். (ந–10)

உரிமைகள் மறறு மாணவர் பிரச்சினை ஆகியவை தொடர்பாக ஆராய சந்தர்ப்பம பெற்றத் தாமாற ஸ்ரீலஙகா சுதந்திரக் கட்சியிடம விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இன்னும பதில் இல்லை–

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு தினேஷ் குணவர்தனா இவ்வாற கூறினார்

இந்த விடயமாக கடந்த நவம்பரில் தாம ஸ்ரீ ல சு கட்சிக்குக் கடிதம எழுதியதாகவும அவர் தெரிவித்தார்–

டது–

அவ்வாறான ஒரு முன்னணி தொடர்பான எந்தப் பேச்சு வார்த்தைகளிலும தமது கட்சி கலந்த கொள்ளவில்லை என்றும திரு குணவர்தனா தெரிவித்தார்

அவ்வாறான ஒரு அரசியல் முன்னணி பற்றி நாட்டில் பரவலாகப் பேசப்பட்ட போதிலும தாம் அதுபற்றி ஆச்சரியப்படுவதாகவும –

ஐக்கிய மே தினம பற்றி நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கூட தமது கட்சி பஙகுபற்றவில்லை என்றும திரு குணவர்தனா கூறினார்– (இ-007)

## சாய்ந்தமருது ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

கல்முனை, பெப் 28

சாய்ந்தமருது ஆஸ்பத்திரிக்கு விரைவில் அமபுலன்ஸ் ஒன்ற கிடைக்கவிருக்கிறது.

பிரஸ்தாப ஆஸ்பத்திரியிலிருந்து பெரிய ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளர்களை ஏற்றிச் செல்ல நீண்ட காலமாக ஒரு அமபுலன்ஸ் இல்லாதிருந்த குறையை நிவர்த்தி செய்யும நோக்கமாக வர்த்தகக் கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூர் எடுத்துக் கொண்ட முயற்சியை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறத,

சாய்ந்தமருது ஆஸ்பத்திரியின் பொறுப்பதிகாரி டாக்டர் ஜனாப் ஏ எல் பரீட் இதனைத் தெரிவித்தார்,

பிரஸ்தாப அமபுலன்ஸ் தற்பொழுத சிறு திருத்தம காரணமாக கொழும்பில் வைக்கப்பட்டிருப்பதாகவும்,

இஙகு கொண்டு வந்த ஒப்படைப்பதில் தான் தாமதமே தவிர மற்றப்படி அம்புலன்ஸ் கிடைப்பதில் எதுவித தாமதமுமில்லை என்றும அவர் கூறினார் (ஐ-281)


கைராஸ் இன்டர்நேஷனல் டிரேவல்ஸ் & டுவர்ஸ்

KHAIRAZ INTERNATIONAL TRAVELS & TOURS

253/ஏ, முதலாம மாடி,
ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை,
கொட்டாஞ்சேனை. கொழுமபு–13

தொலைபேசி எண்– 547123– 436848– 433032

(இலஙகை உல்லாசப் பிரயாணசபையினுல் அஙகீகரிக்கப்பட்டது)

1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல்
இன்ற வரை முப்பத்திரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம ரூபா
(32,35,000/— ரூபா)

நாட்டு மக்களுக்கு "புதிய செவன" டிக்கெட்டுகள் வழஙகிய அதிஷ்டலாபப் பணம இதோ–

★50,000/– ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — 19 பேர்
வழஙகிய தொகை — 9,50,000/– ரூபா

★ 5000/– ரூபா வீதம செவன ஆஙகிலஎழுத்துக்கள் பொருந்திய அதிஷ்டசாலிகள் — 214 பேர்
வழஙகிய தொகை — 10,70,000/– ரூபா

★ 1000/– ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — 1215 பேர்
வழஙகிய தொகை — 12,15,000/– ரூபா

மேலும இரண்டு சீட்டிழுப்பு வாய்ப்புகளை இரு வாரஙகளுக்கு ஒரு முறை ஞாயிறு இரவு 9–00 மணிக்கு தேசிய ரூபவாஹினி உஙகள் முன் கொண்டு வரும–

ஒரு லட்சம ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — ஐந்து பேர்
செவிசமத ரூபவாஹினி போட்டியில் — இரண்டு லட்சம ரூபா

இவை யாவும உஙகளுக்கே! — நாட்டு மக்களுக்கே!
வெற்றி பெற்றாலும பெறாவிட்டாலும — வெற்றி உஙகளுக்கே! !]

Year 2000 Shelter For All

தினபதி

நற்றி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4424
— 1990 மார்ச் 3 —

# காடழிப்பை உலகில் நிறுத்தக் கோரிக்கை

## 30 லட்சம் பேர் கையொப்பமிட்டு ஐ. நா. சபைக்கு மகஜர்

மழை வழங்கும் காடுகள் அழிக்கப்படுவதை நிறுத்தக் கோரி சுமார் 30 லட்சம் மக்களால் கைச்சாத்திடப்பட்ட மகஜர் ஒன்று ஐக்கிய நாடுகள் சபை தலைமைப்பீடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது—

இதனை விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபை, விசேட கூட்டமொன்றை கூட்ட வேண்டும் என்றும் அந்த மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது—

மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த 23 நாடுகளைக் கொண்ட சுமார் 30 லட்சம் மக்கள் இம் மகஜரில் கைசாத்திட்டுள்ளனர்—

பிரேசில், மலேசியா, இந்தியா பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் வன பாதுகாப்பு, மக்களும் இதில் கையொப்பமிட்டிருக்கின்றனர்—

மழைக் காடுகளை அதிகமாக கொண்ட மலேஷியா போன்ற நாடுகள் வன பரிபாலனம் மக்களது வாழ்க்கையை பாதுகாக்க வேண்டுமென்று, ஐக்கிய நாடுகள் சபையிடம் கேட்டுள்ளன.

மழைக் காடுகளை அதிகமாக கொண்ட நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை, மழைக் காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்க்க உடனடியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுள்ளன.

பாரம்பரிய காடுகள் அழிக்கப்படுகின்றன— கால்நடைப் பண்ணைகளை உருவாக்கவும். காணி வளங்களை தோண்டவும். விறகு பலகைத் தேவைக்கும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நிமிடத்திலும் உலகில் 150 ஏக்கர் மழைக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன, என ஆய்வுகள் கூறுகின்றன—

இதனால் புவியியல் சுற்றாடல் பெரும் மாற்றங்களை அடைகின்றன— கால நிலையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன—

மக்களின் உயிர் வாழ்க்கைக்கும், காடழிப்பு பலமான பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன எனவே காடழிப்பை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்—

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இம் மகஜர் தயாரிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது 10 கோடி மக்களின் கையொப்பங்களை திரட்டவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது—

(ம—455)



சர்வதேச மகளிர் தினம் —கொடி ஜனாதிபதிக்கு அணிவிப்பு

சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது— இதனையொட்டிய கொடி விற்பனை சேவா வனிதா இயக்கத்தினரால் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது—

சுச்சரித்த மண்டபத்தில் நடந்த முதலாவது கொடி விற்பனையின் பின் ஒரு யுவதி அந்தக் கொடியை ஜனாதிபதிக்கு அணிவிப்பதைப் படத்தில் காண்க— சேவா வனிதா இயக்கத்தினரும் படத்தில் காணப்படுகின்றனர்—

(எ—*த)

## ஒழுங்காற்று நடவடிக்கை

ஆஸ்பத்திரிகளில் ஒரு சில டாக்டர்கள், தாதிகள், ஏனைய ஊழியர்கள் ஆகியோரின் கவனயீனத்தாலும் ஏனோ தானோ என்ற போக்கினாலும், அசமபாவ மனப்பான்மையினாலும் மரணங்கள் நிகழ்கின்றன.

இந்த கவனயீன மரணங்கள் பற்றிய செய்திகள் அவ்வப்போது புதினப் பத்திரிகைகளில் இடம்பிடித்து வருகின்றன.

இவை காலப்போக்கில் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் ஆகிவிடுமோ என்ற அச்சம் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சிப் போக்கை தடுத்து நிறுத்திவிட வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

மரணங்களுக்கு காரணமானவர்கள் எந்தத் தரத்தில் இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஏனையவர்களையும் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்க வைக்கும்.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீர இதற்கு ஏற்ற வகையில் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.

குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் போது தொழிற்சங்கங்கள் இடையூறாக இருக்கக் கூடாது என்று அவர் கேட்டிருக்கிறார்.

ஆஸ்பத்திரிகளில் அசிரத்தையினால் மட்டும் கடந்த ஒரு மாத காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லும் எண்ணிக்கையில் துர்ப்பாக்கிய மரணங்கள் நிகழ்ந்து விட்டன.

மாத்தறை ஆஸ்பத்திரியில்

## கிராமங்களுக்கு மின்சார வசதிகள் இவ்வருட இறுதிக்குள்

தமபதெனிய, மார்ச் 1

மின்சார வசதிகள் இல்லாத சகல கிராமிய பிரதேசங்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படும்—

இவ்வாறு மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கூறினார்—

தமபதெனிய தொகுதி நாரம்மல நகரத்தில் மின்சார டிப்போ ஒன்று அண்மையில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவினால் திறந்து வைக்கப்பட்டது—

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது—

வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத சகல கிராமியப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன—

1977 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இந்த நாட்டில் கிராமியப் பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது—

2000 ஆம் ஆண்டளவில் இந்த நாட்டின் சகல கிராமியப் பிரதேசங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு விடும்—

சிறு கைத்தொழில் சொந்தக்காரர்களுக்கும், வீட்டுரிமையாளர்களுக்கும் மின்சார இணைப்பைப் பெற வங்கிக் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும்—

(ஐ—138)

## முஸ்லிம் கல்வி மாநாடு வெள்ளிவிழா கொண்டாட்டம்

கொழும்பு, மார்ச் 2

அகில இலங்கை முஸ்லிம்

வத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

## செய்தித் திரட்டு

### வைத்தியசாலை மீண்டும் திறப்பு

அக்குறணை மார்ச் 1

கடந்த 3 வருடங்களாக மூடிக் கிடந்த இரத்தோட்டை குப்பியடி ஆயுள்வேத வைத்தியசாலை மீண்டும் சிகிச்சை வழங்குவதற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது—

அரசினால் பத்தாயிரம் ரூபாவுக்கான ஆயுள்வேத மருந்துகள் இவ்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன— (ஐ—411)

### புகையிலை செடிகள் பாதிப்பு

தெல்தெனிய மார்ச் 1

தெல்தெனிய பகுதிகளைச் சேர்ந்த மெதமகநுவர — ஹலியத்த — வேண்டருவ — அம்பால ஆகிய இடங்களில் புகையிலைச் செடிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளன—

தற்போது நிலவி வரும் கடும் வரட்சியே இப்பாதிப்புக்குக் காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டோருக்குக் குறிப்பிட்ட பயன் கிடைக்கவில்லை என மேலும் கவலை தெரிவிக்கப்படுகின்றது— (ஐ—289)

### கிரவல் பாதை திருத்தியமைப்பு

நாத்தாண்டி மார்ச் 1

மாணிங்கலை — நாராவிலை கிரவல் பாதை சிரமதான மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது—

இப்பாதை பல வருடங்களாகத் திருத்தப்படவில்லை— அதனால் போக்குவரத்து செய்வது சிரமமாகவிருந்தது—

நாத்தாண்டிப் பிரதேச சபையின் மாணிங்கலை உறுப்பினர் ஜனாப் எம் எஸ் எம் மஸ்னவி (ஜே பி) தலைமையில் இச்சிரமதான வேலை நடைபெற்றது—

(ஐ—225)

### முத்திரை வெளியீட்டு விழா

கோப்பாய் மார்ச் 1

வண பிதா லோங் அடிகளாரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா ஏப்ரல் மாதம் 22ஆந் திகதி யாழ் நகரிலும் கொழும்பிலும் நடைபெறும்—

இதுபற்றி தபால் திணைக்

ஆஸ்பத்திரிகளில் அசிரத்தையினால் மட்டும கடந்த ஒரு மாத காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லும எண்ணிக்கையில் துர்ப்பாக்கிய மரணங்கள் நிகழ்ந்து விட்டன.

மாத்தறை ஆஸ்பத்திரியில் கர்ப்பப் பை வெடித்த நிறை மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் உடனடியாக முறையான சிகிச்சை கிடைக்காது மரணமானார்.

அதே அஸ்பத்திரிக்கு பிரசவ வேதனையோடு வந்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அந்தப் பெண்மணி வேறு வழியின்றி தெரு ஓரத்தில் குழந்தையை பிரசவித்தார். குழந்தை இறந்தே பிறந்து விட்டது.

பொரளை சிறுவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படாத நிலையில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார் என்றும தெரிவிக்கப்படுகிறது. இரத்தினபுரியிலும இப்படி ஒரு மரணம நிகழ்ந்திருக்கிறது.

இவற்றை எல்லாம பட்டியல் போட்டுப் பார்க்கையில் இன்று மிருகங்களுக்கு கிடைக்கிற வைத்திய வசதிகளும, பராமரிப்பும கூட மனிதனுக்கு கிடைக்கவில்லையே என்று சொல்லத் தோன்றுகிறது.

டாக்டர்கள், தாதிகள், மருத்துவச்சிகள், ஊழியர்கள் ஆகியோரின் படிப்புக்கும பயிற்சிக்கும, வேதனத்திற்கும பொது மக்களின் வரிப்பணம அல்லவா கொட்டித் தீர்க்கப் படுகிறது.

வைத்தியத் துறையினர் கடமை தவறலாமா? கண்ணியத்தை உதாசீனம செய்யலாமா? இவற்றைத் தவிர்ப்பதற்கும வைத்தியத் துறையின் புனிதத் தன்மையைக் காப்பதற்கும ஒழுங்காற்ற நடவடிக்கை அவசியம.

இதில் தொழிற்சங்கங்கள் குறுக்கிடக் கூடாது. வைத்தியத் துறையின் அரோக்கியத்திற்கு, அமைச்சரின் வேண்டுகோளைச் செவிமடுப்பதே உகந்தது

---

சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும 8 ஆம திகதி கொண்டாடப்படவிருக்கிறது- இதனையொட்டிய கொடி விற்பனை சேவா வனிதா இயக்கத்தினரால் நேற்று முன்தினம் ஆரமபித்து வைக்கப்பட்டது-

சுச்சரித்த மண்டபத்தில் நடந்த முதலாவது கொடி விற்பனையின் பின் ஒரு யுவதி அந்தக் கொடியை ஜனாதிபதிக்கு அணிவிப்பதைப் படத்தில் காண்க- சேவா வனிதா இயக்கத்தினரும படத்தில் காணப்படுகின்றனர்-

(எ-* த)

## சட்டத்தை மீறும் 500 வர்த்தகர்கள்

கொழும்பு, மார்ச்- 2

சட்டத்தை மீறும 500க்கு அதிகமான வர்த்தகர்கள் உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தினால் கண்டு பிடிக்கப் பட்டுள்ளனர்,

இதனை, வர்த்தக திணைக்கள ஆணையாளர் திருமதி ஜே சி பின்னவலை தெரிவித்துள்ளார்.

இவர்களிடமிருந்து ரூ 3,56,000 அபராதம அறவிடப்பட்டுள்ளது என்றும அவர் மேலும தெரிவித்தார்,

(ல-455)

## வருடாந்த மாநாடு

கொழுமபு, மார்ச் 2

கொழுமபு ஒல்லாந்தர் சீர்திருத்த (வூல்வெண்டால்) ஆலய தமிழ் சபையின் வருடாந்த மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3-00 மணி வரை இவ்வாலயத்தில் நடைபெறும-

இம் மாநாடு காலை ஆராதனையுடன் ஆரமபமாகும-

இதைத் தொடர்ந்து தமிழ் சபையின் அறிக்கையும வாலிபர் சங்கத்தின் அறிக்கையும சமர்ப்பிக்கப்படும-

இதன் பின் சபையோரின் ஆலோசனைகள் இடம்பெறும பின் விசேட சொற்பொழிவுகளும பல நிகழ்ச்சிகளும இடம பெறும-

இம மாநாட்டிற்கு சபையின் போதகர் வண ஆர் துரைராஜா தலைமை வகிப்பார்- (ஐ)

## வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு புனரமைப்புத் திட்டங்கள்

திருகோணமலை மார்ச் 1

கடந்த கால வன்செயல்களினால் வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட 60298 மீனவ குடும்பங்களுக்கு 130 கோடி ரூபா செலவில் பல்வேறு புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும-

மாகாண கடற்றொழில் அமைச்சு இதற்கான நடவடிக்கை எடுத்து வருவதாக நிதி வர்த்தக கடற்றொழில் அமைச்சர் திரு பெ கிருபாகரன் தெரிவித்தார்-

நொராட் நிறுவனம மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும - அவுஸ்திரேலியா திருமலை அம்பாறை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும உதவ முன்வந்துள்ளன-

ஐக்கிய நாடு அகதிகள் உயர்ஸ்தானிகராலயம இந்தியாவிலிருந்து திருமபிய அகதி மீனவக் குடுமபங்களுக்கு உதவ முன்வந்துள்ளது-

இதேவேளை மீன்பிடித்துறை சார்ந்த கட்டிடங்கள் - வள்ளங்கள் - லொறிகள் போன்றவற்றை மறுசீரமைக்க ரேப்பியா 2 லட்சம ரூபாவரையிலான கடன்களை வழங்கி வருகிறது-

மக்கள் வங்கி - ஹட்டன் நெஷனல் வங்கி ஆகியனவும மீனவர்களுக்கான கடன்களை வழங்கி வருகின்றன-

இதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கி கடற்றொழில் துறை சார்ந்த கட்டிட நிர்மாண வேலைகளுக்காகவும வாகனங்கள் மற்றும தளவாட உபகரணங்களுக்காகவும் 4 கோடி 17 லட்சம ரூபாவை வழங்கியுள்ளது-

இந்திய அரசு 6-1 கோடி ரூபாவை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உபகரணங்களை வழங்கவும ஐஸ் கட்டித் தொழிற்சாலை அமைக்கவும கடற்றொழில் வேலைத் தலங்களை அமைக்கவும - இறால் பண்ணைகளை அமைக்கவும வழங்கியுள்ளது- (ஐ—288)

## முஸ்லிம் கல்வி மாநாடு வெள்ளிவிழா கொண்டாட்டம்

கொழுமபு, மார்ச் 2

அகில இலங்கை முஸ்லிம கல்வி மாநாட்டின் வெள்ளி விழா கொண்டாட்டங்கள் தொடர்பான சமபிரதாய பூர்வ அங்குரார்ப்பண வைபவம எதிர்வரும மார்ச் 10 ஆம திகதி காலை கொழுமபிலுள்ள ஸாஹிராக் கல்லூரியில் நடைபெறும.

கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம லொக்குபண்டார வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

முஸ்லிம அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் முஸ்லிம எம பி மார்கள், மாகாண சபை, மாநகரசபை முஸ்லிம உறுப்பினர்கள் மற்றும கல்வித்துறைப் பிரமுகர்கள் ஆகியோரும இந்த வைபவத்தில் பங்குபற்றுவர்.

முஸ்லிம கல்வி மாநாட்டின் நிர்வாக சபைத் தலைவர் ஜனாப் எஸ் எல் எம ஷாபி மரிக்கார் இவ்வாறு கூறினார் (ல-007)

## விடுதலையான இளைஞர்களுக்கு செ. சங்கம் உதவி

கோப்பாய், மார்ச் 1

தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம உடுபுடைவை பார்சல்களை வழங்குகிறது-

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டும அவர்களிடம சரணடைந்தும் இருந்தவர்களில் 108 பேர் நல்லூரில் வைத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளனர்-

இவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உடுபுடைவைகள் அடங்கிய பொதிகளை யாழ் செஞ்சிலுவைச் சங்கம் தனது அலுவலகத்தில் வைத்து விநியோகித்து வருகின்றது- (ஐ—142)

## சாய்ந்தமருது ஆஸ்பத்திரியில் பல் டாக்டர் இல்லை:

கல்முனை மார்ச் 1

சாய்ந்தமருது அரசினர் ஆஸ்பத்திரியில் நிறுவப்பட்டுள்ள பற்சிகிச்சை நிலையத்தை செயல்படுத்துவதற்குப் பல் டாக்டர் இல்லாத குறை ஏற்பட்டிருக்கிறது என அறிவிக்கப்படுகிறது-

பிரஸ்தாப ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சை நிலையம ஆரமபித்து வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும மேற்கொள்ளப்பட்டு வேலைகள் யாவும தற்பொழுது பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் உள்ளன-

இந்நிலையத்தை மக்களின் தேவைக்கென திறந்து சிகிச்சையளிப்பதற்கு உரிய டாக்டர் இல்லாததன் காரணமாக செயல்படுத்த முடியாமல் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது-

இவ்வாஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்ட பல் டாக்டர் இங்கு கடமை செய்வதற்கு மறுப்புத் தெரிவித்திருப்பதை அடுத்தே இந்நிலை இங்கு ஏற்பட்டிருக்கிறது-

"சுகாதார அமைச்சு இது விடயத்தில் கவனம செலுத்தி பற்சிகிச்சை நிலையத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்-

சமபந்தப்பட்டவர்கள் கவனம செலுத்துவார்களா? (ஐ-281)


மக்கள் பிரச்சினையில் தினபதி


கோப்பாய் மார்ச் 1

வண பிதா லோங் அடிகளாரின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா ஏப்ரல் மாதம 22ஆம் திகதி யாழ் நகரிலும கொழும்பிலும நடைபெறும-

இதுபற்றி தபால் திணைக்களம பிதா லோங் அடிகள் ஞாபகார்த்த குழுவுக்கு அறிவித்துள்ளது-

முத்திரை வெளியீட்டு விழா யாழ் நகரிலும கொழும்பிலும நடைபெறும- (ஐ—142)

## நேர்முகப் பரீட்சை

ஏறாவூர் மார்ச் 1

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் கடமை புரியும தற்காலிக அதிபர்களுக்கு அவர்களுடைய கோட்டக்கல்வி அலுவலகங்களில் நேர்முகப் பரீட்சைகள் மாவட்ட கல்வித் திணைக்களத்தினரால் நடத்தப்பட்டன,

இந்நேர்முகப் பரீட்சைகள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பணிப்பில் நடத்தப்படுவதாகவும 1986 முதல் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் பதவி வகித்தவர்களே பெரும பாலும நிரந்தரமாகும வாய்ப்பு இருப்பதாயும தெரிவிக்கப்படுகிறது-

மிகுதி வெற்றிடங்கள் பரீட்சை அடிப்படையில் தெரிவாகும விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட உள்ளதாயும தெரிய வருகிறது- (ஐ—073)

## அரபுக் கல்லூரி பட்டமளிப்பு விழா

காலி மார்ச் 1

காலி அல்-பஹ்ஜதுல் இப்றாஹிமிய்யா அரபுக் கல்லூரியின் 21ஆவது பட்டமளிப்பு விழா இன்று 3ஆம திகதி சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும-

ஜனாப் அல்ஹாஜ் மாக்கான் மாக்கார் தலைமையில் நடைபெறும இவ்விழாவில் தென் மாகாண சபை ஆளுனர் அல்ஹாஜ் எம ஏ பாக்கீர் மாக்கார் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்- (331)

போட்டிக் குழுக்களிடையே

# கிழக்கு பேரூட்டில் பயங்கர மோதல்

## 75 பேர் பலி; பலர் காயம்

பேரூட், மார்ச் 2

**கிழக்குபேரூட்டில் போட்டி குழுக்களிடையே வியாழனன்று பயங்கரப் போராட்டமொன்று இடம்பெற்றது. சுமார் 75 பேர் உயிரிழந்தனர். இரு வார கால யுத்த நிறுத்தத் துக்கு பலத்த அடியாக இந்தப் போராட்டம் அமைந்துள்ளது.**

லெபனான் கிறிஸ்தவ படைகள் இரவோடிரவாக தாக்குதலை ஆரமபித்தன,

முன்னாள் லெபனான் தலைவர் மைக்கல் ஓவனின் நமபிக்கை மிக்க மக்கள் படைகள் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது,

தாஙகிகளிலும, ஆயுத வாகனஙகளிலும சென்ற லெபனான் கிறிஸ்தவ படைகள் ராக்கட் தாக்குதல்களையும நடத்தின, இரவோடிரவாக இந்தத் தாக்குதலை கிறிஸ்தவ படைகள் நடத்தின,

கடந்த ஜனவரி 31ஆம திகதி நடந்த இதுபோன்ற ஒரு யுத்தத்திலும 75 பேர் உயிரிழந்தனர், இவர்களில் 35 பேர் பொத மக்களாவர், 170 பேர் காயமடைந்தனர்,

இப்போது நடந்த போராட்டத்தில் பலியான 75 பேருடன் இதுவரை காலம நடந்த மோதல்களின் விளைவாக இறந்தோர் எண்ணிக்கை 785 ஆக உயர்வடைந்துள்ளது,

காயமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 2,600 ஆகும.

வியாழன் இரவு கிறிஸ்தவ படைகள் தாக்குதலை ஆரமபித்த போது தலைநகரில் வாழும 800,000க்குமதிக மக்கள் செய்வதறியாது திகைத்தனர்,

எண்ணற்றோர் பீதியால் பதுங்கு குழிகளில் தஞ்சம புகுந்தனர்,

அச்சத்துடன் குழப்பம நடந்த இடத்திலிருந்து ஓட்டமெடுத்த ஒருவர் லெபனான் கிறிஸ்தவப் படைகள் நகரையே அழிக்க முயற்சிக்கின்றன எனக்கண்டித்தார்,

லெபனானின் அரசமைப்பு ஆட்சியாளர் தாமென மைக்கல் ஓவன் கருதுகிறார், போட்டிக் குழுக்களில் ஒன்றான மற்றொரு மக்கள் படையின் தலைவர் சமீர் ஜியாஜியாவும அவரது சகாக்களும ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென அவர் உத்தரவிட்டிருக்கிறார்,

ஜியாஜியாவும, மைக்கல் ஓவனும போராட்டமொன்றைத் தொடர உறுதி பூண்டிருப்பது தெளிவாகிறதென அரசியல் வட்டாரஙகள் கூறுகின்றன,

இன்னும ஓரிரு தினஙகளில் போராட்டம உக்கிரமடையலாம எனவும எதிர்பார்க்கப்படுகிறது,

ஜியாஜியா படைகள் தனித்து இயஙகாமல் தன்னுடன் இணைய வேண்டுமென ஓவன் தெரிவித்திருக்கிறார், ஜியாஜியா தலைமையில் 10,000 படையினர் உள்ளனர், லெபனான் நெருக்கடி தீரும வரை அவர்கள் ஆயுதஙகளைக் கீழே வைக்க வேண்டுமென மைக்கல் ஓவன் தெரிவித்துள்ளார், (எ)

## செக்கோசிலவாக்கியா—ரஷ்ய கூட்டு இராணுவ ஒத்திகை

பிரேக், மார்ச் 2

செக்கோசிலவாக்கிய, ரஷ்ய துருப்பினரின் கூட்டு இராணுவ ஒத்திகை ஒன்று வியாழக்கிழமை நடைபெற்றது,

செக்கோசிலவாக் கி யா வில் இருந்த ரஷ்யத் துருப்புகள் வெளியேற்றம் மூன்று தினஙகளுக்கு முன்னர் ஆரம்பமாகின,

செக்கோசிலவாக்கிய பாதுகாப்பு அமைச்சர் மிரோஸ்வேவ் வசெக் இராணுவ ஒத்திகை பற்றிக் கருத்து வெளியிடுகையில்,

செக்கோசிலவாக் கி யா வில் மேற்குப் பகுதி கார்லொவி வேரியில் இராணுவ ஒத்திகை நடைபெற்றது, ரஷ்யத் துருப்பு வெளியேற்றம ஆரமபம் ஆவதற்கு முன்னரே இராணுவ கூட்டு ஒத்திகை பற்றிய திட்டம வகுக்கப்பட்டது,

இந்த ஒத்திகையில் 1,000 ரஷ்யத் துருப்புகள் கலந்துகொண்டன,

செக்கோசிலவாக் கி யா வில் இருக்கும ரஷ்யத் துருப்புகளை முற்றாக வாபஸ் பெறச் செய்வதற்கான பேச்சு வார்த்தைகள்

## விபத்தில் 16 பேர் பலி

கோலாலம்பூர், மார்ச் 2

கோலாலமபூரில் புதன் கிழமை நடந்த விபத்தொன்றில் 16 பேர் பலியாகினர்.

பொலீஸ் டிரக் ஒன்றும பஸ் ஸொன்றும மோதியதால் இந்த விபத்து இடம பெற்றது.

மலேஷியாவின் உத்தியோகபூர்வ செய்தி ஸ்தாபனமான பெர்னாமா இத்தகவலை புதனன்று வெளியிட்டது. இறந்தவர்களில் 11 பேர் பொலீஸ் உத்தியோகத்தர்களாவர். 25 பேர் விபத்தில் படுகாயமடைந்தனர். (எ)

பிலிப்பைன்ஸ்

## எதிர்க்கட்சி உறுப்பினர் என்றைலின் மேன்முறையீடு உயர்நீதிமன்றம் விசாரிக்கும்

மணிலா, மார்ச் 2

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்குவினோவின் ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் கைதாகி சிறைவாசம பெற்ற எதிர்க் கட்சி உறுப்பினர் ஜுவான் பொன்ஸ் என்றைலின் மேன்முறையீடு விசாரணைக்கெடுத்தக கொள்ளப்படும,

எதிர்வரும செவ்வாயன்று என்றைலை உயர் நீதிமன்றத்தில ஆஜராக்குமபடி ஆணை பிறப்பக்கப்பட்டுள்ளது,

வீண் குற்றச்சாட்டு, பிணையில் செல்ல மறுத்தமை, சட்ட நடவடிக்கை எடுக்க விடாமல் தடுத்தமை ஆகியவற்றிற்கு அரசாஙகம பதில் தரவேண்டும என்று என்றைல் வேண்டினார், அதை நீதியரசர்கள் ஏற்றனர்,

பலரின் அழிவுக்கு வித்திட்ட இப்புரட்சிச் சதியின் காரணமான மற்றும் இவருடன் என்றைல் கைது செய்யப்பட்டார,

இது தனது பரம எதிரியான என்றைலுக்கு எதிரான சட்ட நடவடிக்கையைத் தவிர அரசியல் உந்தல் அல்ல என்று ஜனாதிபதி அக்குவினோ கூறினார்,

இதேவேளையில் சதி தொடர்பாகக் கைதான இரு இராணுவ அதிகாரிகள் தலைமறைவாகி உள்ளனர், என அறிவிக்கப்படுகிறது, (எ—ரி)

# உலகச் செய்திகள்

## நேபாள மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

டாக்கா, மார்ச் 2

50க்குமதிக நேபாள மாணவர்கள் வங்காளதேச தலைநகரான டாக்காவில் நேபாளத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்,

பல் கட்சி ஜனநாயகம் உட்பட கூட்டம் கூடும சுதந்திரம கோரியே இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்,

ஜனநாயகத்துக்கு ஆதரவளிக்கும நேபாள மக்கள் சித்திரவதைக்குட்படுத்தப் படுவதை தடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர், (எ)



## ஹெல்மட்கோல்—கொர்பச்சேவ் சந்திப்பு

அண்மையில் மேற்கு ஜெர்மன் தலைவர் ஹெல்மட் கோல், ரஷ்யத் தலைவர் மிக்காயல் கொர்பச்சேவ் சந்திப்பு ரஷ்யாவில் இடமபெற்றது, அவ்வேளையில் எடுக்கப்

## இஸ்ரவேலில யூத குடியேற்றம்

ஜெருஸலெம, மார்ச் 2

யூத குடியேற்ற வாசிகள் சுமார் 230,000 பேர் இவ்வாண்டு இஸ்ரவேல் வரவுள்ளனர்.

இவர்கள் ரஷ்யாவிலிருந்து இஸ்ரவேல் வருவார்கள்.

இஸ்ரவேல் உதவி நிதி அமைச்சர் ஜொஸிபெய்லின் புதனன்று இத்தகவலை வெளியிட்டார்.

இவ்வாண்டு ரஷ்ய யூதர்கள் 150,000 பேர் இஸ்ரவேல் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும இந்த எண்ணிக்கை இப்போது உயர்ந்துள்ளது. (எ)

## நேபாளத்துக்கு 5 கோடி டாலர் கடனுதவி

காத்மண்டு, மார்ச் 2

நேபாளத்துக்கு 5 கோடி 10 லட்ச டாலர்களை ஆசிய அபிவிருத்தி வஙகி கடனாக வழஙகும்.

நேபாளத்தில் மின் திட்டம் ஒன்றை அமைக்க இந்த நிதியை ஆசிய அபிவிருத்தி வஙகி வழ

தெ... அமெரிக்க அமைச்சரின்

பதுங்கு குழிகளில் தஞ்சம புகுந் முன்னர் ஆரம்பமாகின, யேற்றம ஆரமபம் ஆவதறு

செகுடோசலவாக கி யா வல இருக்கும ரஷ்யத் துருப்புகளை முற்றாக வாபஸ் பெறச் செய்வ தற்கான பேச்சு வார்த்தைகள் இப்போது நடைபெறுகின்றன,

பிரேக் நடத்திய மதிப்பீட்டின் படி 90,000 க்குமதிக ரஷ்ய துருப்புகள் இங்கிருப்பத தெரிய வந்திருக்கிறது,

(எ)

அண்மையில் மேற்கு ஜெர்மன் தலைவர் ஹெல்மட் கோல், ரஷ்யத் தலைவர் மிக்காயல் தொர்பச்சேவ் சந்திப்பு ரஷ்யாவில் இடமபெற்றது, அவ்வேளையில் எடுக்கப் பட்ட படம, 6 மணி நேரம இரு தலைவர்களும பேச்சு வார்த்தை நடத்தினர், வடக்கு கிழக்கு ஜெர்மனிகள் இணைவத தொடர்பான பேச்சுவார்த்தைக்கு இச் சந்திப் பின் போது முக்கியத்துவம அளிக்கப்பட்டது,

(எ)

நேபாளத்தில் மின் திட்டம ஒன்றை அமைக்க இந்த நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழ ஙுகிறது-

இதற்கான ஒப்பந்தமொன்று ஆசிய அபி- வங்கித் தலைவர் கிமிமாஷா தருமிசு, நேபாளம நிதிச் செயலாளர் சஷி நார யண்ஷா ஆகியோரால் கைச்சாத் திடப்பட்டது-

(எ)

தெ. ஆ[illegible]ரிக்க அமைச்சரின் [illegible]

# அங்கோலா விஜயத்தால் சிவில் யுத்தத்துக்கு முடிவு?

ஜஹனஸ்பர்க், மார்ச்- 3

தென் ஆபிரிக்க வெளிநாட் டமைச்சர் பிக்போத்தாவின் அங்கோலா விஜயம, 15 வருட கால சிவில் யுத்தத் துக்கு முடிவு கொண்டுவரலா, மென எதிர்பார்க்கப்படுகிறது

இதுபற்றி அரசியல் அவதானி கள் கருத்த வெளியிட்டுள்ளனர்.

தெ- ஆபி- வெளிநாட்ட மைச்சர் பிக்போத்தா அங கோலா ஜனாதிபதி ஜோஸ் எட் வார்டோ டொஸ் சான்டோஸ், அங்கோலா வெளிநாட்டமைச் சர் பேட்ரோ டி கஸ்ட்ரோ வான்டியுமை ஆகியோர் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்-

தென் ஆபிரிக்காவுக்கும அங்கோலாவுக்கும் இடையில் ராஜதந்திர உறவுகள் கிடையாது போர்த்துக்கலில் இருந்த 1975 ஆம் ஆண்டு அங்கோலா சுதந்தி ரம பெற்றது- இதன் பின்னர் தென் ஆபிரிக்க அமைச்சரொரு வர் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும-

இரு தரப்பினரும அமைதி நிலவ வேண்டுமென்பதை வர வேற்றனர்- அங்கோலா அதன் நோக்கத்தில் வெற்றி காண தெ- ஆபிரிக்கா உதவ வேண்டு மென கேட்கப்பட்டுள்ளது-

(எ)

# ஹொங்கொங் சீனர்களுக்கு பிரி. கடவுச்சீட்டு

## நிறுத்தும்படி [illegible]எச்சரிக்கை

பீக்கிங், மார்ச் 2

தெரிவு செய்யப்பட்ட ஹொங்கொங வாசிகளுக்கு பிரிட்டிஷ் கடவுச்சீட்டு கொடுப்பதை நிறுத்தாவிட் டால், சீனா எதிர் நடவ டிக்கை எடுக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுத்திருக்கி றது,

சீன வெளியுறவுப் பேச்சா ளர் லீ சாஓசிங சீன - பிரிட்டிஷ் ஒப்பந்தத்தை பாரதூரமாக பிரிட்டன் மீறுவதாகக் குற்றஞ் சாட்டினார்,

ஹொங்கொங மக்கள் தொகையில் ஐந்து விகிதத்தை பிரிட்டனில் குடியமர்த்துவத முறைகேடான செயல் என்றார், லீ சாஓசிங, 1997 ஆம ஆண்டு ஹொங்கொங்கைத் தம்மிடம ஒப்படைக்கும பொழுது சகல பிரஜைகளும சீனர்களாக இருப் பார்கள் என்றும அவர் கூறினார்

வெளிநாட்டுப் பிரஜையாக சீன அரசின் அனுமதி வேண்டும, இல்லையேல் அத்தகைய பிரஜா வுரிமை அனுமதிக்கப்படமாட் டாது,

தோழமை நாடுகளும ஹொங்கொங மக்களுக்கு பிர ஜாவுரிமை கொடுக்க வேண்டு மென பிரிட்டன் தூண்டுவதாக அங்கே உள்ள பத்திரிகைகள் கூறுகின்றன,

இவற்றை எல்லாம குறைப் பிரசவ செய்தியாக பிரிட்டிஷ் வெளியுறவுச் செயலாளர் டக் ளஸ் சொன்னார்,

(எ-ரி).

# காஷ்மீர் படு கொலைகள்:

# இந்தியா மீது பாக். கண்டனம்

இஸ்லாமாபாத், மார்ச் 2

காஷ்மீரில் இடமபெற்று வரும பயங்கரப் படுகொலை களையிட்டு பாகிஸ்தான், இந் தியாவை வெகுவாகக் கண் டித்திருக்கிறது,

இந்திய பாதுகாப்புப் படையி னரால் இந்திய கட்டுப்பாட்டின் கீழிருக்கும காஷ்மீரில் சுமார் 29 பேர் கடந்த தினம சுட்டுக் கொல்லப்பட்டனர், இதனை ஆவன செய்யப்படும்-

வேடுகளாக வைத்திருக்கவும் யடுத்தே பாகிஸ்தான் இவ்வாறு கண்டனக் குரல் எழுப்பியிருக் கிறது,

இந்தியாவின் இச்செய்கை காஷ்மீரிகளின் எழுச்சிக்கு ஏதுவாகிறது, ஐ நா சபை காஷ் மீர் மக்களுக்கு வழங்கிய சுய நிர்ணய அதிகாரத்தை அவர்கள் நிலைநாட்ட முயல்வதில் தவ றில்லை,

இவ்வாறு பாகிஸ்தான் தெரி வித்துள்ளது,

காஷ்மீர் முஸ்லிமகளுக்கு தாம உதவவில்லையென பாகிஸ் தான் மறுத்து வருகிறது, போரா ட்டம நடத்தும முஸ்லிமகளின் முயற்சி ஒருபோதும வீண் போகாதெனவும பாகிஸ்தான் அதன் அறிக்கையில் தெரிவித் துள்ளது,

(எ)

29 ஆண்டுகளில் முதல் தடவையாக

# பர்மாவில் பல் கட்சித் தேர்தல்

## பிரசாரப் பணிகளில் கட்டுப்பாடு

ரங்கூன், மார்ச்- 2

பர்மாவில் எதிர்வரும் மே 27இல் தேர்தல்கள் நடை பெறவுள்ளன- இதற்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட எதிர்க் கட்சிகள் முன் னதாகவே அனுமதி பெற வேண்டும்-

இவ்வாறு அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்-

சட்டவிரோதப் பேச்சுக்கள் மக்கள் முன்வைக்கப்படுவதைத் தடுக்கவும, எதிர்க் கட்சிகளின் பேச்சுக்களை வரலாற்றுப் பதி

இவற்றிற்கேற்ற விதத்தில் நகர அதிகாரிகளால் அவை முன்னதாகவே அனுகுப்படும் இப் படி இன்னுமொரு சட்டத்துறை பேச்சாளர் கூறினார்-

ஒவ்வொரு கட்சிக்கும மேடை யில் பேச மூன்று மணித்தியா லங்கள் கொடுக்கப்படும-

கடந்த 29 வருடங்களில் முதன் முறையாக பல் கட்சித் தேர்தல் பர்மாவில் நடைபெற விருக்கிறது- இந்த பல் கட்சித் தேர்தலில் இவையே புதிய கட் டுப்பாடுகளாக இருக்கும-

(எ-ரி)

# ஆர்ப்பாட்டத்தில் கைதான 169 பேர்

## நேபாளத்தில் விடுதலை

காத்மண்டு, மார்ச் 2

நேபாளத்தில் 169 பேர் விடுதலை செய்யபட்டனர்

தேசிய ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நான்கு தினங்களுக்கு முன்னர் கைதானவர்களே புதனன்று விடுதலை செய்யப்பட் டனர்-

பல் கட்சி அரசியல் முறை கோரி இங்கு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன—

நேபாளத் தலைநகரான காத் மண்டுவில் 64 பேர் விடுவிக்கப் பட்டனர்-

தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட னர்- நேபாளம காங்கிரஸ் கட் சியும இதில் அங்கத்துவம வகித் துள்ளது-

தடை செய்யப்பட்ட இயக் கங்களின் தலைவர்கள் நேபாளத் தில் இடம்பெற்ற நெருக்கடிக ளுக்கு அரசாங்கத்தைக் குற்றம சாட்டியிருக்கின்றனர்-

(எ)

# அயடீன் குறைவால் பெண்கள் பாதிப்பு

## வடக்கு கிழக்கு தவிர்ந்த மாகாணங்களில் என தகவல்

கொழும்பு, மார்ச் 2

வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரும்பாலான பெண்கள் அயடீன் சத்து குறைவினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்—

இதன்படி நாடு முழுவதிலும் உள்ள 70 லட்சம் பெண்களில் 50 லட்சம் பெண்கள் இந் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்—

இந்த பயஙகர நிலைமையினால் எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகள் குட்டையாகவும் மந்த பத்தியுடையதாகவும் இருக்கும்—

இப்படி சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது—

அயடீன் சத்து இன்மை நோய் குறித்து திங்களன்று கொழும்பிலுள்ள குடும்ப சுகாதார பணியகத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது—

சுகாதார பணியகத்தின் இயக்குநர் டாக்டர் மேர்ல் பெரேரா இந்த கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்தும் போதே மேற்படி தகவலை தெரிவித்தார்—

டாக்டர் மேர்ல் பெரேரா இந்த நோய் பற்றி மேலும் தகவல் தருகையில் கூறியதாவது—

நாடு முழுவதிலும் உள்ள ஆரம்ப பாடசாலைகளில் கல்வி பயிலும் 60 ஆயிரம் பிள்ளைகளின் மத்தியில் ஆய்வு நடத்தப்பட்டது— இந்த ஆய்வு மூலமே மேற்படி பயஙகர தகவல்கள் தெரிய வந்தன—

இந்த அயடீன் சத்து இன்மை நோய்க்கு உரிய பரிகாரம் காணா விட்டால் எதிர்காலத்தில் இது ஒரு பயஙகர தேசிய பிரச்சினையாகி விடும்,

ஆகையால் அயடீன் கலந்த உப்பை பாவிப்பதன் மூலம் இந் நிலையை மாற்றி அமைக்க முடியும்— இதனால் மக்கள் அயடீன் கலந்த உப்பை உட்கொள்வதற்கு பழக வேண்டும்—

இப்படி டாக்டர் மேர்ல் பெரேரா கூறினார்—

(ஐ—வ)

## பணம், நகைகள் கொள்ளை

கொழும்பு, மார்ச் 2

கிந்தோட்டையில் வீடொன்றினுள் புகுந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியொன்று நான்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், நகைகள் மற்றும் மாணிக்கக் கற்கள் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றது,

வீட்டுக்காரரைத் துப்பாக்கி முனையில் மிரட்டி பத்து லட்சம் ரூபாவைத் தருமபடி கேட்டனர், ஆனால் அவ்வளவு பணம் தம்மிடம் இல்லை என்று அவர் சொன்னதும் வீடெங்கும் சோதனையிட்ட கொள்ளையர் மேற்படி பொருட்களுடன் வெளியேறி மறைந்தனர்.

(ல—032)

## பொலீஸ் கான்ஸ்டபிள் நேர்முகப் பரீட்சை நாளை 4 ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 2

இலஙகை தேசிய தோட்டத் தொழிலாளர் சஙகத்தின் ஏற்பாட்டில் உப பொலீஸ் அதிபர் மற்றும் கான்ஸ்டபிள்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை 4 ஆம் திகதி பசறையிலும் 5 ஆம் திகதி பதுளையிலும் 6 ஆம் திகதி பண்டாரவளையிலும் நடைபெறும்—

இப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு 7 ஆம் திகதி பண்டாரவளையில் எழுத்து மூலப் பரீட்சை நடைபெறும்—

இலஙகை தேசிய தோட்டத் தொழிலாளர் சஙகத்தின் உதவிச் செயலாளரும், ஊவா மாகாண சபை உறுப்பினருமான திரு வேலாயுதம் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் இத்தகவலை தெரிவித்துள்ளார்—

(ஐ—ங)



## நோன்பு காலத்தில் சீரான சேவைக்கு திட்டம்

ரமழான் நோன்பு காலத்தில் தஙகுதடையின்றி பல்வேறு சேவைகளையும் திறமபட மேற்கொள்வதற்கென ஒரு திட்டம் வகுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்,

சர்வதேச வை எம எம ஏ அசெமபிளி விடுத்த கோரிக்கையின் பேரிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்,

இவ்விடயம தொடர்பாக பிரதமரின் செயலாளர் கூட்டிய மாநாட்டில் பல்வேறு அரச நிறுவனஙகளின் பிரதிநிதிகளும பஙகுபற்றினர்,

சர்வதேச வை எம எம ஏ அசெமபிளி மாவட்ட ஆளுநர் ஜனாப் ஹஸன் அல்பாஸி ஹரீப், தலைவர் அல்ஹாஜ் எம அஷ்ரப் ஹுஸைன் ஆகியோரும அதிகாரிகளுடன் படத்தில் காணப்படுகின்றனர்,

(ல—007)

## பல்கலை மாணவர் கைது; ஆராயும் கமிட்டி தொடர்ந்து இயங்கும்

கொழும்பு, மார்ச் 2

பல்கலைக் கழக மாணவர்களை கைது செய்வது தொடர்பாக ஆராயும கமிட்டியின் தலைவர் தனது பதவியை ராஜினாமா செய்த போதிலும இக் கமிட்டி தொடர்ந்தும இயஙகி வருகிறது.

இப்படி பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல்கலைக் கழக மாணவர்களுக்கு சலுகை அளிப்பதற்கென அமைக்கப்பட்ட இந்த கமிட்டியின் தலைவராக பதவி வகித்த திரு டீ எஸ் எம செனவிரத்ன, தனது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

எனினும ஓய்வு பெற்ற பிரதி பொலீஸ் மா அதிபர் திரு எட்வட் குணவர்த்தன, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஏ ஆர் எம ஜயவர்த்தன, பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன் அலவிகாரே மற்றும சகல உபவேந்தர்கள் விரிவுரையாளர் சமமேளனத்தின் அதிகாரிகள் போன்றோர் இக்கமிட்டியில் அஙகம வகித்து செயல்பட்டு வருகின்றனர் — என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேற்படி கமிட்டிக்கு விரைவில் புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும அவர் சொன்னார்.

(ந—வ)

## கொங்கிறிட் சிலீப்பர் கட்டை உற்பத்தி நிலையம்

### எதிர்வரும் 14இல் திறப்பு

கொழும்பு, மார்ச் 2

ஆஸ்திரேலிய அரசாஙகத்தின் உதவியுடன் தெமட்டகொடையில் அமைக்கப்பட்டிருக்கும கொஙகிறீட் சிலீப்பர் கட்டை உற்பத்தி நிலையம இமமாதம 14 ஆம திகதி திறந்து வைக்கப்படும—

ரயில் பாதைகளில் போடப்பட்டுள்ள சிலீப்பர் கட்டைகளில் பெருமபாலானவை உடைந்தும சேதமடைந்தும காணப்படுகின்றன—

புதிதாக இலஙகையில் உற்பத்தி செய்யப்படும கொஙகிறீட் சிலீப்பர் கட்டைகளைக் கொண்டு சேதமடைந்த ரயில் பாதைகள் திருத்தி அமைக்கப்படும என்று போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ் கூறினார்—

பலகையிலான சிலீப்பர் கட்டைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை விட, கொஙகிறீட் சிலீப்பர் கட்டைகளை உள்ளூரில் தயாரிப்பது லாபகரமானது என தெரிய வந்துள்ளது—

இதனையடுத்து இத்தகைய உற்பத்தி நிலையம ஒன்றை இலஙகையில் அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது என்றும அமைச்சர் சொன்னார்—

இந்த உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்காக ஆஸ்திரேலிய அரசு 13 கோடி ரூபாவை உதவியாக வழஙகியது— இந்த உற்பத்தி நிலையம இயஙகத் தொடஙகியதும பெரும எண்ணிக்கையானோர் வேலை வாய்ப்புகளை பெறுவர் என்றும அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்—

(ல—வ)

## வாக்களிப்பு தினம் அண்மித்ததும் பயமுறுத்தல் சுவரொட்டிகள் தோன்றின

### மனுதாரர் தரப்பு சாட்சி

கொழும்பு, மார்ச் 2

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினம சமீபத்து வந்த...

சட்டத்தரணி— எச்சரிக்கை சுவரொட்டிகள் எல்லாக் கட்சியினரையும மிரட்டுவதாகவே...

சாட்சி— ஆம!

சட்டத்தரணி— ஆனால் 60 கட்சிக் கிளைகள் இருந்தன என்பதை நிரூபிக்கும ஒரு ஆவணத்தைக் கூட நீர் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை?

சுவரொட்டி பிரசாரமும நடைபெற்றதா?

சாட்சி— ஆம... டிசமபர் முதல் வாரத்தில் சுவரொட்டிகள் தேர்தலை பகிஷ்கரியுஙகள் தோன்ற ஆரமபித்தன— மேரசடி...

## 10 வயது சிறுமி மானபஙகம

கொழும்பு, மார்ச் 2

பத்து வயதுச் சிறுமி ஒருத்தி பட்டப் பகலில் வீட்டில் நுழைந்த இளைஞன் ஒருவனால் மானபஙகப்படுத்தப்பட்டார்.

இவர் கவலைக்கிடமான மாத்தறை ஆஸ்பத்திரி நிலையில்...

கேகாலையில்

## இம்மாத இறுதியில்

ஆசிரியர் இடமாற்றத் திட்டம்

கேகாலையில்

# இம்மாத இறுதியில் ஆசிரியர் இடமாற்றத் திட்டம்

வறக்காப்பொளை மார்ச் 1

கேகாலை மாவட்டத்தில் இமமாத இறுதியல் ஆசிரியர் இடமாறறத திட்டம ஒன்று அமுலநடததபபடவுள்ளது-

இதன்பொருட்டு இமமாவட்டப் பாடசாலைகளில் சேவையாறறும ஆசிரியர்களின் விபரத்திரட்டொன்று கோட்டக் கல்விப் பணியகஙகள் மூலம மேற் கொள்ளப்பட்டுள்ளன-

இவ்விபரத்திரட்டினை அடுத்து சில பாடசாலைகளில் தேவைக்கு மதிகமான ஆசிரியர்கள் கடமையாற்றி வருவதால் அதே நேரத்தில் பல பாடசாலைகளில் அதிக ளவில் ஆசிரியர் பறறாக்குறை நிலவுவதும தெரியவந்துள்ளது-

தெஹியோவிற்ற, ருவான்வல்லை ஆகிய பகுதிகளில் குறிப்பாகத் தோட்டப் பாடசாலைகளிலேயே அதிகளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது-

ஆனால் மாவனல்லை, கேகாலை ஆகிய கோட்டக் கல்விப் பணியகஙகளுக்குட்பட்ட பாடசாலைகளில் அதிகளவில் மேலதிக ஆசிரியர்கள் கடமை புரிவதும தெரியவநதுள்ளது-

மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளில் இருநது ஆசிரியர்களை ஆசிரியர் பற்றாக் குறை நிலவும பகுதிப் பாடசாலைகளுக்கு இடமாறறுவதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்வதில் தறபோது கோட்டக் கல்விப் பணியகஙகள் முன்வநதுள்ளன-

இதே நேரம அண்மையில் வழஙகப்பட்ட பயிலுநர் ஆசிரியர் நியமனத்திற்குப் புறமபாக தோட்டப் பாடசாலைகளுக்கெனத் தெரிவான ஆசிரியர்களுக்கான புதிய ஆசிரியர் நியமனம ஒன்றும விரைவில் அமுல்நடத்தப்படவுள்ளதாகத் தெரிகிறது-

கேகாலை மாவட்டத்திலும சுமார் 30 பேருக்கு இந்நியமனம கிடைக்கவுள்ளதாகவும அறியப்படுகிறது- இதனால் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினை ஓரளவு தீரவழி பிறந்துள்ளது-

[இ—333]

## 6000 ஏக்கரில் தக்காளி செய்கை

குருநாகல், மார்ச் 1

குருநாகல் மாவட்டத்தில் அடுத்த சிறுபோகத்தில் 6,000 ஏக்கர் பிரதேசத்தில் தக்காளி செய்கை மேற்கொள்ளப்பட உள்ளது-

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடமேல் மாகாண சபை விவசாய உணவு கூட்டுறவுத் தறை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது-

தக்காளிச் செய்கையாளர்களுக்கு வஙகிக் கடன் வசதிகள் உட்பட மற்றும பல வசதிகள் செய்யப்படும-

(ஐ—138)

## விசேஷ பஜனை சொற்பொழிவு

கொட்டகலை, மார்ச் 1

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கடப்பையூர் சச்சிதானந்த சுவாமிகள் ஆகியோரது ஜயந்தி தினஙகளை ஒட்டி அண்மையில் மட்டுக்கொல்லை ஸ்ரீ முத்துமாரியமமன் ஆலயத்தில் விசேட பஜனைகளும சொற்பொழிவுகளும இடமபெற்றன-

ஆன்மீகக் கலை இலக்கிய பேரவையின் சார்பில் சக்தி உபாசகர் கிரு வீ என் கணபதி இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்-

(ஐ—400)

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு

## மனுதாரர் தரப்பு சாட்சி

கொழுமபு, மார்ச் 2

ஜனாதிபதித் தேர்தல வாக்களிப்பு தினம சமபநதது வநத செய்தி யாபபஹுவ தொகுதியில் துப்பாக்கி பிரயோகம் நடந்ததாக குறிப்பிடுகின்ற ஒரு சுவரொட்டிகள் தோன்றவாரமபத்தன- சுதந்திரக் கட்சிக் காரியாலயஙகளில் இருநது விலகிக் கொள்ளுமாறு கூறும சுவரொட்டிகள எச்சரித்திருந்தன- நாடெஙகும ஊரடஙகுச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருந்தது-

ஜனாதிபதியின் தேர்தல் ஆட்சேபனை மனு மீதான விசாரணையில் மனுதாரர் தரப்பில் மீதானற ஆர் டபிள்யூ வக்கிரம சிஙக பண்டார இவ்வாறு சாட்சியமளித்தார்- இச்சாட்சியம தவறானதென்று அவரைக் குறுக்கு விசாரணை செய்த பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி கே என் சொக்ஸி தெரிவித்தார்- இக் கூற்றை சாட்சி ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்-

திரு பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் வெறறியீட்டியது செல்லுபடியாகாது என்று தெரிவித்து திருமதி சிறுமாவோ பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிஙக நீதியரசர்கள் எச் டி தமபையா ஜி பி எஸ் டி சில்வா எம ஜமீல் பி இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது-

இச் சுவரொட்டிகள் எல்லா கட்சி ஆதரவாளர்களுக்கும பொதுவான எச்சரிக்கை விடுப்பதாக அமைந்திருந்தாலும கூட குறிப்பாக இவை சுதந்திரக் கட்சியினரை எச்சரிப்பவைகளாகவே காணப்பட்டன என்றும் சாட்சி தெரிவித்தார்-

முதலில் ஈ ஏ தர்மதாச சாட்சியமளித்தார்- சட்டத்தரணி சொக்ஸி சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்-

சட்டத்தரணி— எச்சரிக்கை சுவரொட்டிகள் எல்லாக் கட்சியினரையும மிரட்டுவதாகவே அமைந்திருந்தனவா?

சாட்சி— சில சுவரொட்டிகள் சுதந்திரக் கட்சியினருக்கு எச்சரிக்கை விடுப்பனவாகவிருந்தன-

சட்டத்தரணி— நீர் பணியாற்றிய கோரளையில் 62 அல்லது 64 சுதந்திரக் கட்சி கிளைகள இருந்தனவா?

சாட்சி— ஆம!

சட்டத்தரணி— இவை எப்போது அமைக்கப்பட்டன?

சாட்சி— தேர்தல் காலத்தின் போதே பெருமபாலான கிளைகள் ஆரம்பிக்கப்பட்டன- கட்சிக் கிளைத் தலைவராக நான் பதவியேற்ற போது 16 வாக்குச் சாவடிகளாக இப்பகுதி பிரிக்கப்பட்டிருந்தது- பதினொரு சாவடிகள் இஙகு அமைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்தாலும சில சாவடிகள் அமைக்கப்படவில்லை என்று பின்னர் நான் கேள்விப்பட்டேன்-

சட்டத்தரணி— பதினொரு சாவடிகளுக்கான பகுதிகளில் அறுபது கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டிருந்தன?

சாட்சி— ஆம்!

நீதியரசர் தமபையா— ஒரு வாக்குச் சாவடிப் பகுதியில் 5 அல்லது 6 கிளைக் காரியாலயஙகள் என்றாகிறது-

சாட்சி— இக் கோரளையில் 120 கிராமங்கள் உள்ளன- இரு கிராமங்களுக்கு ஒரு கிளைக் காரியாலயம என்ற ரீதியாக அமைக்கப்பட்டன- இதைத் தவிர மகளிர் மற்றும் இளைஞர் அமைப்புகளும அமைக்கப்பட்டிருந்தன-

சட்டத்தரணி— இக்கிளைகள் தொடர்பான ஆவணஙகள் உள்ளனவா?

சாட்சி— ஆம!

சட்டத்தரணி— ஆனால் 60 கட்சிக் கிளைகள் இருந்தன என்பதை நிரூபிக்கும ஒரு ஆவணத்தைக் கூட நீர் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை?

சாட்சி— இவற்றைக் கொண்டு வருமபடி நான் கேட்கப்படவில்லை-

சட்டத்தரணி— யார் இதைச் சொல்ல வேண்டும என நீர் நினைக்கிறீர்?

சாட்சி— நீதிமன்றம் உத்தரவிடும என்று கருதினேன்-

சட்டத்தரணி— அழைப்பாணை மட்டுமே விடுக்கப்பட்டது- ஆவணஙகளைக் கொண்டு வருமபடி சொல்லப்படவில்லை

சாட்சி— ஆம-

பின்னர் எம கே ஆனந்த சந்திரலால் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்- யாப்பஹுவ தொகுதியின் அமபன் பொலவையைச் சேர்ந்த இவரை சட்டத்தரணி சுனில் ஒபேசேகர விசாரணை செய்தார்-

சட்டத்தரணி— அமபன் பொலையில் உள்ளூர் சுதந்திரக் கட்சி உள்ளதா?

சாட்சி— இதன் செயலாளராக நான் கடமையாற்றுகிறேன்-

சட்டத்தரணி— உமது கோரளையில் எத்தனை கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டன-

சாட்சி— 66 கிளைக் காரியாலயஙகள்- இஙகு 68 கிராமஙகள் உள்ளன- எனக்குத் தெரிந்தவரையில் 11 ஆயிரத்து 533 வாக்காளர்கள் உள்ளனர்-

சட்டத்தரணி— 1988 ஆம ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை உமமால் ஞாபகத்துக்குக் கொண்டுவர முடியுமா?

சாட்சி— ஆம... தேர்தல் பிரசாரப் பணிகளை நான் ஏற்பாடு செய்தேன்-

சட்டத்தரணி— தேர்தல் பிரசார காலத்தின் போது சுவரொட்டி பிரசாரமும நடைபெற்றதா?

சாட்சி— ஆம... டிசமபர் முதல் வாரத்தில் சுவரொட்டிகள் தேர்தலை பகிஷ்கரியுஙகள் தோன்ற ஆரமபித்தன- மோசடி என்று இவற்றில் எழுதப்பட்டிருந்தன- டிசம்பர் மூன்றாம் வாரத்தில் வாக்காளர்களுக்கு மரணம என்று எழுதப்பட்ட சுவரொட்டிகள் தோன்றின-

சட்டத்தரணி— மக்கள் நடமாட்டத்தை இச்சுவரொட்டிகள் கட்டுப்படுத்தினவா?

சாட்சி— ஆம... ஏனெனில் டிசமபர் 17ஆம திகதி நள்ளிரவு தொடக்கம இருபதாம திகதி வரை ஊரடஙகு அமுல் செய்யப்படும என்று சுவரொட்டிகள் அறிவித்திருந்தன-

சட்டத்தரணி— எஙகெஙகு இவை ஒட்டப்பட்டிருந்தன?

சாட்சி— எமது கோரளையில் எல்லா முக்கிய இடஙகளிலும் அமபன்பொல நகரிலும இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன-

சட்டத்தரணி— சுதந்திரக் கட்சி வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடையே இவை எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன?

சாட்சி— இச்சுவரொட்டிகளைக் கண்டோர் வாக்களிக்க அஞ்சினர்- கட்சி பிரசார பணிகளில் ஈடுபட்டிருந்த ஆதரவாளர்கள் தமது பணிகளில் இருந்து ஒதுஙகிக் கொண்டனர்-

சட்டத்தரணி— வாக்களிப்பு தினத்தன்று நீர் வாக்குச் சாவடிகளுக்குச் சென்றிருந்தீரா?

சாட்சி— ஆம... இக் கோரளையின் எல்லா சாவடிகளுக்கும நான் சென்றிருந்தேன்- ஐந்து சாவடிகளில் சுதந்திரக் கட்சி தேர்தல் பிரதிநிதிகள் கூட கடமையில் இருக்கவில்லை-

சட்டத்தரணி— யாப்பஹுவ தொகுதியில் 24-2 சதவீதத்தினரே வாக்களித்திருந்தனர்?

சாட்சி— ஆம-

சட்டத்தரணி— வாக்களிக்குமபடி நீர் தூண்டினீரா?

சாட்சி— வாக்களிக்கச் செல்ல மக்கள் அச்சமுற்றிருந்தனர்- வாக்களிக்குமபடி நான் அவர்களிடம கேட்டுக்கொண்டிருந்த போதும சிலர் வாக்களிக்கவில்லை நானும் வாக்களிக்கவில்லை மாலை 3-15 மணியளவில் வாக்களிக்கும பொருட்டு நான் சாவடிக்குச் சென்றிருந்த போது சாவடி மூடப்பட்டிருந்தது- எனது சாவடி அலபொடகம கனிஷ்ட வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும- ஆனால் வாக்குப் பெட்டிகள் பொரவாவ வித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்ததால் அஙகு நான் வாக்களிக்கச் சென்றிருந்தேன்-

சட்டத்தரணி— பழைய சாவடியில் இருந்து எவ்வளவு தூரத்தில் புதிய சாவடி அமைக்கப்பட்டிருந்தது?

சாட்சி— ஐந்து மைல் தூரத்தில்- என் வீட்டில் இருந்து ஏழு மைல் தூரமிருக்கும- [விசாரணை தொடரும்]

[ல—032]

## சிறுமி மானபஙகம

கொழுமபு, மார்ச் 2

பத்து வயதுச் சிறுமி ஒருத்தி பட்டப் பகலில் வீட்டில் நுழைந்த இளைஞன் ஒருவனால் மானபஙகப்படுத்தப்பட்டார்.

இவர் கவலைக்கிடமான நிலையில் மாத்தறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்-

சிறுமியை மானபஙகப்படுத்தியதாகக் கூறப்படும இளைஞன் தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது-

வெளியே சென்றிருந்த தாயார் வீடு திருமபும வரை, பிரஸ்தாப சிறுமி தனது தமபி, தஙகைகள் இருவரையும கவனித்துக் கொண்டிருந்தார்-

அவ்வேளை வீட்டினுள் நுழைந்த இளைஞன் சிறுமியை மானபஙகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது-

சந்தேக நபரைக் கைது செய்வதற்காக கந்தரை பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்-

இதுவரை பத்துக்கும மேற்பட்டோரின் வாக்குமூலஙகளையும பொலீஸார் பெற்றுள்ளனர்-

[ந—வ]

13 ஆவது ஆசிய கூடைபந்தாட்டம்

# சிங்கப்பூர் செல்வதற்கு 12 வீராங்கனைகள் தெரிவு

கொழும்பு, மார்ச்— 2

சிங்கப்பூரில் எதிர்வரும் 12 ஆம திகதி ஆரமபமாகும 13 வது ஆசிய கூடைபந்தாட்ட சாமபியன்ஷிப்பில் 12 இலங்கை வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள்— இவர்களில் ஒன்பது வீராங்கனைகள் சர்வதேச மட்ட அனுபவம கொண்டவர்கள்— பதினேழாம திகதி வரை நடைபெறவிருக்கும இப்போட்டியில் பன்னிரெண்டு நாடுகள் கலந்து கொள்ளும என எதிர்பார்க்கப படுகிறது—

சீனா, கொரியா, ஜப்பான், தாய்வான், மலேசியா, ஹொங கொங, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாட்டு அணிகளுடன் இலங்கை அணியினர் மோதவர்—

இந்த அணியின் ஒன்பது பேர் பாடசாலை மாணவிகளாவர்— ஏனையோர் அரசாங்க மற்றும தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்—

இலங்கை அணி எதிர்வரும ஒன்பதாம திகதி சிங்கப்பூர் புறப்படும— (எ—032)

உலக கிண்ண உதைபந்தாட்டம்

## கிண்ணம் பெறும் அணிக்கு விசேஷ வெகுமதி

பிராங்ஸ் மார்ச் 2

இவ்வாண்டு நடுப்பகுதியில் இத்தாலியில் நடைபெறவிருக்கும உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத்தில் மேற்கு ஜெர்மனி வெற்றியீட்டி கிண்ணத்தைக் கைப்பற்றுமானால அணியினருக்கு 73 ஆயிரம டாலர் விசேஷ வெகுமதியாக வழங்கப்படும—

மேற்கு ஜெர்மனி உதைபந்தாட்ட சமமேளன தலைவர் நடத்திய உயர்மட்ட மாநாட்டில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது— ஜெர்மன் வீரர்களை ஊக்குவிக்கும முகமாகவே விசேஷ வெகுமதிகளை வழங்கும இத்திட்டம நடைமுறைக்கு வருகிறது—

இத்தாலியில் நடைபெறவிருக்கும தெரிவாட்டங்களில் கடைசி 16 ஆட்டங்களில் பங்குபெறும தகுதியை அணியினர் அடைந்தால் மட்டுமே விசேஷ வெகுமதிகளுக்கு அவர்கள் உரித்துடையவர்களாவர். இதன் பின்னர் அணியினரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 12 ஆயிரம, 48 ஆயிரம என வெகுமதி அதிகரிக்கப்பட்டு 73 ஆயிரம எல்லையை அடையும— ஜெர்மன் அணி இறுதியாட்டத்தில் வெற்றியீட்டுமானால் இறுதியாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஈடுபடாதவர்கள் என்ற வித்தியாசம காட்டப்படாமல் இவ் வெகுமதி சகல வீரர்களுக்கும வழங்கப்படும—

1986 ஆ ஆண்டு மெக்சிகோ உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கு ஜெர்மன் அணி தெரிவான போது அந்நாட்டு அணியினர் 60 ஆயிரம டாலர்களை சன்மானமாகப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது— (எ—032)

## அந்தோனியார் கல்லூரி வெற்றி

கண்டி மார்ச் 2

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரிக்கும கண்டி திரித்துவக் கல்லூரிக்கும இடையில் 13 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் அந்தோனியார் கல்லூரி வெற்றியீட்டியது—

அந்தோனியார் கல்லூரி 177 ஓட்டங்களைப் பெற்றது—

திரித்துவக் கல்லூரி 77 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது—

அந்தோனியார் சார்பில் முத்தையா சசிதரன் 28 ஓட்டங்களைக் கொடுத்த 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்—

இவர் சிரேஷ்ட பிரிவு கிரிக்கெட் அணியின் வீரரான முத்தையா முரளீதரனின் சகோதரர் ஆவார்— (எ—017)

விளையாட்டு பகுதி

## சுழல் பந்து வீச்சாளருக்கு பயிற்சி வழங்க நிலையம்

கொழும்பு, மார்ச்— 2

இலங்கை கிரிக்கெட் அணியில் வேக பந்து வீச்சாளர்கள் பலர் உள்ளனர் ஆனால் சுழல் பந்து வீச்சாளர்கள் போதியளவு இல்லை—

இக்குறையைப் போக்க இலங்கையில் சுழல் பந்து வீச்சாளருக்கென பயிற்சி நிலையம ஒன்று அமைக்கப்பட்டுள்ளது—

இப்பயிற்சி நிலையத்தில் பிற நாடுகளில் உள்ள பிரபல சுழல் பந்து வீச்சாளர்கள் பயிற்சி அளிப்பார்கள்—

இவர்களில் இலங்கையைச் சேர்ந்த காமினி குணசேன அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த "லெக்கி" ஜோர்ஜ் டிரைப், இந்தியாவைச் சேர்ந்த சுபாஸ் குப்தே ஆகியோர் இலங்கை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள்—

இமமாதிரியான பயிற்சி நிலையங்கள் கொழுமபில் மட்டுமல்லாமல் நாட்டின் இதர பகுதிகளுக்கும விஸ்தரிக்கப்படும— (எ—455)

## சப்—இன்ஸ்பெக்டர் உடையில் சிங்கள நடிகர்

### கடும் எச்சரிக்கையின் பின் விடுதலை

கொழும்பு, மார்ச்— 2

சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை போல உடையணிந்து காரில் பயணம செய்த சிங்கள நடிகர் ஒருவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் கடுமையாக எச்சரிக்கை செய்த பின் பொலீஸார் அவரை விடுதலை செய்தனர் இவரை விடுதலை செய்தனர்.

பிரபல சிங்கள திரைப்பட நடிகரும பாடகருமான இவர் பிரபல பாடகர் ஒருவரின் மகனாவார்.

சப் இன்ஸ்பெக்டரைப் போல சீருடையணிந்து இவர் தனது சாரதியுடன் காரில் இரவு பத்து மணியளவில் பயணம செய்து கொண்டிருந்த போது பொரளை டி எஸ் சேனநாயக்கா மாவத்தையில் வைத்து பொரளை பொலீஸார் இவரைக் கைது செய்தனர்.

தான் பொலீஸ் அதிகாரியாக நடிக்கும காட்சி அன்றிரவு படமாக்கப்பட இருப்பதாலேயே பொலீஸ் வேடமணிந்த படப்பிடிப்பு நடக்கும மாளிகாவத்தை பொலீஸ் நிலையம நோக்கி சென்று கொண்டிருப்பதாக இவர் பொலீஸாரிடம விளக்கமளித்தார். ஆனால் இவ்விளக்கத்தை ஏற்றுக் கொள்ள மறுத்த பொலீஸார் இரவு முழுவதும பொரளை பொலீஸ் நிலையத்தில் நடிகரைத் தடுத்து வைத்தனர்.

தகுதியற்ற எவரும பொலீஸ் சீருடை அணிவது தடை செய்யப்பட்டுள்ளது என்றும நடிகர் ஒருவர் காமிரா முன்னிலையில் மட்டுமே பொலீஸ் அதிகாரியாக உடையணிந்து நடிக்க முடியும என்றும இவருக்கு அறிவுறுத்தப்பட்டதாக பொரளை பொலீஸ் நிலைய தலைமை அதிகாரி சிறிகுகனேசன் தினபதிக்கு தெரிவித்தார்.

பொரளை பொலீஸாரே விசாரணை நடத்தி வருகின்றனர். (ந—032)

## இந்தியா — நியூஸிலாந்து 3—ஆவது டெஸ்ட் வெற்றி தோல்வி இல்லை

ஆக்லாந்து மார்ச் 2

இந்தியாவுக்கும நியூஸிலாந்துக்கும இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது இந்த டெஸ்ட் தொடரில் 1—0 என்ற ரீதியாக நியூஸிலாந்து வெற்றியீட்டியது—

கிறைஸ்ட் சர்ச்சில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் நியூஸிலாந்து வெற்றியீட்டியது இரண்டாவது டெஸ்ட மழை காரணமாக கைவிடப்பட்டது—

ஆக்லாந்தில் இப்போது நடந்து முடிந்த மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்சில் ஐந்து விக்கெட் இழப்புக்கு நியூஸிலாந்து அணியினர் 483 ஓட்டங்களை எடுத்திருந்தனர்—

பின்னர் துடுப்பெடுத்தாடிய இந்திய வீரர்கள் 149 ஓட்டங்களை விக்கெட் இழப்பின்றி எடுத்திருந்தாலும 64 ஓவர்களுக்குள் 396 ஓட்டங்களை எடுக்க வேண்டிய அசாத்திய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்—

நியூஸிலாந்து முதல் இன்னிங்சில 391 ஓட்டங்களை எடுத்திருந்த அதேசமயம இந்தியா முதல் இன்னிங்சில் 482 ஓட்டங்களை எடுத்திருந்தது— (எ—032)

## இல்ல விளையாட்டு போட்டிகள்

புத்தளம மார்ச் 1

புத்தளம சாஹிரா தேசியக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டு விழா கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடந்தேறியது—

கமால், இக்பால், ஜின்னா, தாரிக் ஆகிய நான்கு இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்—

விளையாட்டுப் போட்டிகளில் இக்பால் இல்லம 253 புள்ளிகளைப் பெற்று முதலாம இடத்தையும, ஜின்னா இல்லம 205 புள்ளிகளைப் பெற்று இரண்டாம இடத்தையும, தாரிக் இல்லம 148 புள்ளிகளைப் பெற்று மூன்றாம இடத்தையும பெற்றுக் கொண்டன— (எ—241)

## இலவச குர்ஆன் விநியோகம்

கொழுமபு, மார்ச் 2

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி மூலம அன்பளிப்புச் செய்யப்பட்ட தஃப்ஸீமுல் குர்ஆன் பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படும—

காலி தென் இலங்கை இஸ்லாமிய செயலகம இதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும—

ஏற்கனவே ஒரு தொகை குர்ஆன் பிரதிகள் தென் மாகாணத்தில் பல்வேறு குர்ஆன் மத்ரஸாக்களுக்கும அன்பளிப்புச் செய்யப்பட்டு உள்ளன— [ஐ—007]

## விமான சேவைகள்

மார்ச் 3 (சனிக்கிழமை)

மார்ச் 4 (ஞாயிற்றுக்கிழமை)

வானொலி

6—45 நாட்டுப் பாடல்கள் — எஸ் விவேகானந்தன்

7—00 குன்றின் குரல் - தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்

என் கருணாகரன்

8—30 சுவாரா மலாயூ மலாய் மஞ்சரி நடத்துபவர்—

10—45 நினைவில் நிறைந்தவை

11—00 ஒலிபரப்பு முடிவு...

## மார்ச் 3 (சனிக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0405 | மஸ்குட் | ஜீ எப் 3144 |
| 0700 | துபாய் | ஈ கே 802 |
| 0715 | சிப்போல் பாரிஸ் அபுதாபி | யூ எல் 564 |
| 0740 | பிராஙபோர்ட் சூரிச் துபாய் | யூ எல் 548 |
| 0800 | சிப்போல் தஹ்ரான் கராச்சி | பீ கே எல் 801 |
| 1105 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை | ஐ சி 573 |
| 1145 | மாலைதீவு | ஈ கே 803 |
| 1300 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1545 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1755 | பம்பாய் | ஐ சி 586 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2245 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | சிஙகப்பூர் | யூ எல் 303 |
| 2350 | ஹொங்கொங பாஙகொக் | |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0520 | மஸ்குட் | ஜீ எப் 3144 |
| 0800 | மாலைதிவு | ஈ கே 802 |
| 0815 | திருவனந்தபுரம | யூ எல் 131 |
| 0845 | பாஙகொக் ஹொஙகொங | யூ எல் 422 |
| 0900 | மாலைதீவு | யூ எல் 101 |
| 0930 | சிஙகப்பூர் | யூ எல் 302 |
| 1235 | பம்பாய் | ஐ சி 573 |
| 12?5 | துபாய் | கே 803 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் 201 |
| 1840 | சென்னை | ஐ சி 586 |
| 1915 | சென்னை | யூ எல் 121 |
| 1940 | கராச்சி தஹ்ரான் சிப்போல் | ஈ கே 802 |
| 2350 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |

## மார்ச் 4 (ஞாயிற்றுக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0430 | பஹ்ரேன் | யூ எல் 202 |
| 0530 | பஹ்ரேன், டோஹா | ஜீ எப் 144 |
| 0620 | லண்டன், துபாய் | யூ எல் 504 |
| 0950 | திருச்சி | யூ எல் 132 |
| 1015 | பாரிஸ், மஸ்கட் | யூ டி 568 |
| 1030 | டசில்டோ | எல் டி 724 |
| 1155 | மஸ்கட் | எல் டீ 720 |
| 1223 | பாஙகொக் | டி ஜீ 307 |
| 1330 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 2110 | சிஙகப்பூர் | யூ டீ 567 |
| 2130 | மாலைதிவு | யூ எ 102 |
| 2335 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0055 | துபாய், சூரிச் பிராஙபோட் | யூ எல் 547 |
| 0115 | அபுதாபி, பாரிஸ், சிப்போல் | யூ எல் 563 |
| 0645 | டோஹா, பஹ்ரேன் | ஜீ எல் 563 |
| 0700 | திருச்சி | ஜீ எப் 144 |
| 1045 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1125 | சிஙகப்பூர் | யூ டி 568 |
| 1335 | மஸ்கட் | எல் டி 720 |
| 1430 | டசல்டோ | எல் டி 724 |
| 1730 | மாலைதிவு | யூ எல் 162 |
| 1755 | பமபாய், கராச்சி | யூ எல் 181 |
| 1905 | கராச்சி | யூ எல் 227 |
| 2225 | மஸ்கட், பாரிஸ் | யூ எல் 564 |
| 2315 | புக்குவொக்கா, நெரிடா | யூ எல் 456 |
| 2330 | சிஙகப்பூர் | ஏஸ் கியூ 402 |

குறிப்பு— யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பீ கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் டி ஜீ — தாய் எயர் வேய்ஸ். பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

## வானொலி

### 3—3—1990

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — வெங்கடேஸ்வர சுப்ர பாதம
5-30 பாமாலை — நவக்கிரக ஸ்தோத்திரம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ நற்சிந்தனை
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம தொடர்ந்து அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 புல்லாஙகுழல் — நீலா குஞ்சுமணி
8-15 தமிழ் மூலம சிஙகளம — என் டீ பீரிஸ்
8-30 மாணவர் மன்றம — தொகுத்து நடத்துபவர் எம எச் பௌசுல் அமீர்
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 கல்வியரஙகம
10-30 அறிவுச்சுடர் — நடத்துபவர் கே எஸ் பாலச்சந்திரன்
11-00 இசையமுதம
11-30 ஓடி விளையாடு பாப்பா நடத்துபவர் ரேலஙகி செல்வராஜா
11-45 அரஙகேற்றம
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தகசேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக்கோவை
6-30 இசைப் பயிற்சி — ஏ எஸ் நாராயணன்
7-00 குன்றின் குரல் - தொகுப்பு ஜோசப் ராஜேந்திரன்
7-30 சர்வோதயம
7-50 உலகச் செய்திகள்
இரவு —
8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 "நேயர் குரல்" நேயர்களின் கடிதஙகளுக்கு முஸ்லிம சேவைக் கட்டுப்பாட்டாளர் பதிலளிக்கக் கேட்கலாம
8-15 திருக்குர்ஆன் ஆய்வுரை நிகழ்த்துபவர் அல்ஹாஜ் எம எம அப்துல் காதர்
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 இளைஞர் இதயம நடத்துபவர் செய்யது ஏ மௌலானா
8-50 இஸ்லாமிய கீதம
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 நாடகம - "கர்வமும வாழ்வும" எழுதியவர் அராலியூர் ந சுந்தரம பிள்ளை
10-00 இசைக் கச்சேரி — ஏ எஸ் நாராயணன்
10-45 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு

### 4—3—1990

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை பத்மநாப சுப்ரபாதம
5-30 பாமாலை - சூரிய நமஸ்காரப் பாடல்கள்
5-45 சைவநற்சிந்தனை
5-55 பௌத்தநற்சிந்தனை
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-45 மாகாணச் செய்திகள்
8-00 கிறிஸ்தவ கீதஙகள்
8-15 மெல்லிசைப் பாடல்கள்
மஞ்சரி நடத்துபவர்- அல்ஹாஜ் டி டி ஸல்டீன்
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 ஆஙகில பாடம
10-30 வீட்டே நாடகம - கே எஸ் பாலச்சந்திரன்
10-45 பூவையர் பூஙகா -நடத்துபவர் சற்சொரூபவதி
11-15 சிறுவர் மலர் - வானொலி மாமா
11-45 நேயர் கடிதம
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானாமிர்தம
6-30 கிறிஸ்தவ கீதஙகள்
7-00 கத்தோலிக்க நிகழ்ச்சி புதிய உலகம மலர்வேந்தன்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்
இரவு —
8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 இஸ்லாமிய கீதம பாடுபவர்- நிஸாம கரீம
8-20 சிறுகதை "ஒரு பொண்ணு நெனைச்சா" பிரதி சுஹைதா ஏ கரீம
8-30 அறிவுக்களஞ்சியம நடத்துபவர்- ஏ சி ராவுத்தர் நெய்னா வீ முஹமமத்
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 எப்படிப் பாடினரோ கவிதைச் சித்திரம சில்லையூர் செல்வராஜன்
9-45 இசைக் கச்சேரி - எஸ் கணபதிப்பிள்ளை

## டெலிவிஷன்

### 3—3—1990

### ரூபவாஹினி

7-00 பிரெக்பெஸ்ட் ஷோ
9-30 ஒளிபரப்பு முடிவு
சேவை 11
4-30 "காயனா"
5-00 பிராந்திய செய்திகள்
5-30 "சஙகமம"
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 தமிழ் பாடல்கள்
6-30 செய்திகள் - தமிழ்
7-00 "டிரான்ஸ் வேல்ட் ஸ்போட்
8-00 செய்திகள் - சிஙகளம
8-30 யஷோராவய
9-00 திர தரு சினமா தொரதரு
9-30 செய்திகள் - ஆஙகிலம
10-00 ஜேமஸ் லாஸ்ட் ஸ்டார் பரேட்
10-25 ஸ்கெயார்க்ரோ அன்ட் மிஸிஸ் கிங
11-15 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

5-00 சிமெமி ஸ்ட்ரீட்
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 மல்கெக்குல
6-30 மதுரசாஙக
7-30 சனிதா வாசனா
8-00 டேக் த ஹை றோட்
8-30 டிஸ்கோ ரவி
9-00 அபான்ஸ் சனிதா சந்தல்ல
9-30 நீரோ லைட்
10-00 செய்திகள் ஆஙகிலம
10-26 நீரோ லைப் தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

**தினபதி**

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# ஒற்றுமை இன்மையால்தான்

## யுத்த நிறுத்த முயற்சி தோல்வி —ரஞ்சன்

கொழும்பு, மார்ச்— 2

தமிழ் குழுக்களுக்கு இடையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசும், தமிழக முதல்வர் திரு கருணாநிதியும் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை—

தமிழ் குழுக்களுக்கு இடையில் காணப்படும் ஒற்றுமை இன்மையும், விட்டுக் கொடுக்காத தன்மையுமே இந்த நிலைமையை ஏற்படுத்தி உள்ளன என்று வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்—

ஜனாதிபதி திரு பிரேமதாசா சமாதான பூமி ஒன்றை உருவாக்கவே முயற்சிகளை மேற்கொண்டார்— தென் பகுதியில் அவரது முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன—

இதே போன்று வடக்கு பகுதி தமிழ் குழுக்களுடனும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்—

அரசாங்கம் மார்ச் முதலாம் திகதிக்கு முன் எல்லா ஆயுதங்களையும் ஒப்படைத்து விட வேண்டும் என காலக்கெடு விடுத்துள்ளது— இப்பொழுது அக்காலக்கெடு முடிந்து விட்டது—

இந்திய அமைதிப் படையினரும் தமிழ், தேசிய இராணுவமும் தமக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன என்றும் இவை முற்றாக இங்கிருந்து வெளியேறும் வரை தமது பாதுகாப்பிற்கு ஆயுதங்களை வைத்திருக்க வேண்டும் என்றும், இவை வெளியேறிய பின் தமமிடம் உள்ள ஆயுதங்களை கைவிட்டு விடுவதாகவும் புலிகள் ஜனாதிபதியிடம் உறுதி அளித்துள்ளனர்—

இந்தியப் படை வெளியேறிய பின்னரும் ஆயுதங்களுடன் திரிபவர்கள் தொடர்பாக அரசாங்கம் உரிய நேரத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்க தயங்காது—

இப்படி திரு விஜேரத்ன கூறினார்— (ல—ய)

ஜப்பான் அரசின் உதவியுடன்

# ரூ. 446 கோடி செலவில்

# 7 அபிவிருத்தி திட்டங்கள்

## பிரதமர் விஜேதுங்க தகவல்

கொழும்பு, மார்ச்— 2

ஜப்பானிய அரசின் உதவியுடன் 446 கோடி பத்து லட்சம் ரூபா செலவில் ஏழு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன—

கடந்த அக்டோபர் மாதம் பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின் பேரிலேயே ஜப்பானிய அரசு இந்த உதவியை வழங்கியுள்ளது—

நிதி அமைச்சரும் தொழில் மற்றும் சமூக நல அமைச்சருமான பிரதமர் திரு டிக்கிரி பண்டா விஜேதுங்க இதனை அமைச்சரவையில் தெரிவித்தார்

கடந்த புதன்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரதமர் ஜப்பானிய அரசு வழங்கவிருக்கும் உதவிகள் தொடர்பாக விளக்கம் அளித்தார்—

பாரிய கொழும்பு அபிவிருத்தித் திட்டத்திற்கு எட்டுக் கோடி 20 லட்சம் ரூபாவும் துறைமுக அபிவிருத்தி மற்றும் தொள்கலன்கள் இறங்குதுறை அபிவிருத்திக்கு 174 கோடி ரூபாவும் கட்டுநாயக்க அபிவிருத்தித் திட்டத்திற்கு 14 கோடி 30 லட்சம் ரூபாவும் —

புத்தளம், ருஹுணு சிமெந்து தொழிற்சாலை அபிவிருத்திக்கு 96 கோடி 60 லட்சம் ரூபாவும் தொலைத் தொடர்பு மற்றும் மின்சார உப நிலைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 16 கோடி ரூபாவும் —

ஐந்து நீர் விநியோகத் திட்டங்களுக்கு 54 கோடி 50 லட்சம் ரூபாவும் உர வகை மற்றும் கைத்தொழில் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் 82 கோடி 50 லட்சம் ரூபாவும் செலவிடப்படும்—

இக் கடன்கள் 25 முதல் 30 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்— அதற்கு மேலாக சலுகை தவணையாக பத்து வருடங்களுக்கு வழங்கப்படும்—

இக்கடன் தொகைகளுக்கு 2-5 சதவீத வட்டி மட்டுமே செலுத்த வேண்டும் எனவும் பிரதமர் அங்கு கூறினார்— [ல—ய]

## ஒற்றை ஆட்சியே

## மு. காங். நிலைப்பாடு

### ஈழ பிரகடனம் பற்றி அஷ்ரப்

கொழும்பு, மார்ச்— 2

இலங்கையில் ஒற்றை ஆட்சி இருக்க வேண்டும் என்பதே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடாகும்,

ஒற்றை ஆட்சிக்குள் ஜனநாயக ரீதியாக சிறுபான்மையினருக்கு உரிமையும், அதிகார பங்கீடும் வழங்கப்பட வேண்டும்.

இந்த நிலைப்பாட்டின் காரணமாகவே வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஈழபிரகடனம் தொடர்பான அந்த மாகாண சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவளிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஜனாப் எம எச் எம அஷ்ரப் இப்படித் தெரிவித்தார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது—

இந்த நிலைமைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும், காரணமாக இருந்த நிலைமைகள் தொடர்பாக நாம் கவலைப்படுகிறோம்.

ஆயுதம் தாங்கிய இளைஞர்களை ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் சேர்ப்பது என்ற அரசின் நிலைப்பாடு ஏற்கனவே அவ்வாறு சேர்ந்தவர்களை ஜனநாயக வழியில் இருந்து வெளியே தள்ளிவிடும் வகையில் அமையக் கூடாது என முஸ்லிம் காங்கிரஸ் பல முறை கூறி வந்துள்ளது—

அரசு நிதானமாக செயல்பட்டு இருந்தால் இந்த நிலைமையைத் தவிர்த்து இருக்கலாம

இனி மேலாவது நாட்டை பிளவு படுத்தக் கூடிய நிலைமைகள் தொடர்பாக பாராமுகமாக இருக்காமல் திரு வரதராஜப் பெருமாளுடனும் அவருடன் இருக்கும் சக்திகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி 3 சமூகங்களும் ஐக்கியமாக வாழக் கூடிய சூழ்நிலைகளை அரசு ஏற்படுத்த வேண்டும்.

இப்படி ஜனாப் அஷ்ரப் தெரிவித்தார். (ல—ற)

## தனிநாட்டு பிரகடனத்தை

## அரசாங்கம் ஏற்காது

### — விஜேகோன்

கொழும்பு, மார்ச்— 2

திரு வரதராஜப் பெருமாள் தமிழ் ஈழத்தை பிரகடனப்படுத்திய போதிலும் அரசு அதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை— உலகம் அதனை ஏற்கப் போவதில்லை—

பொது நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் திரு யூ. பி விஜேகோன் இப்படித் தெரிவித்தார்—

ஈழப் பிரகடனத்தைப் பற்றி கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்—

அவர் மேலும் தெரிவித்ததாவது—

என்னிடம் இதனைப் பற்றி கேட்கும் வரை இந்தச் செய்தியை நான் அறிந்திருக்கவில்லை—

மாகாண சபை சட்ட திட்டங்களின் பிரகாரமே மாகாண சபைகள் செயல்பட வேண்டும்—

மாகாண சபை ஒன்றை கலைக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாகாண ஆளுநருக்கு உண்டு—

திரு பெருமாளின் பிரகடனம் ஒரு கேலிக் கூத்தே தவிர, வேறொன்றல்லை—

தனி நாடு அமைக்க அவருக்கு அங்கு மக்கள் ஆணையையோ ஒத்துழைப்பையோ வழங்கவில்லை—

எனவே இந்த பிரகடனம் வெறும் கேலிக் கூத்தாகும்—

இப்படி அவர் தெரிவித்தார்— (ல—ற)

## புத்தரின் புனித தந்தம்

## மக்கள் தரிசனத்துக்கு

### கண்டியில் நேற்று முதல் 11 வரை

கண்டி, மார்ச்— 2

புத்த பெருமானின் புனித சின்னம் பொது மக்களின் தரிசனத்திற்காக நேற்றுத் தொடக்கம் 11 ஆம் திகதி வரை ... நிலமே திரு நிரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்—

நகரில் இயங்கும் சகல கடைகளும் காலை 10 மணிக்கு அல்

## பொலீஸ் — பொதுமக்கள்

## நல்லுறவு கருத்தரங்கு

### நாளை 4ஆம் திகதி

கொழும்பு, மார்ச்— 2

பொலீஸ் – பொது மக்கள் நல்லுறவு தொடர்பான கருத்தரங்கொன்று எதிர்வரும் 4ஆம் திகதி பாணந்துறை, தொட்டவத்தை அல்பஹ்றியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும், ...யர் சங்கமும், பொலீஸ் பொது மக்கள் நல்லுறவு குற்றத் தடுப்பு பிரிவும் இணைந்து இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளன, (ல—வ)

## நோயுற்ற மாணவருக்கு

வைக்கப்பட்டுள்ளது-

ஆயிரக்கணக்கான பௌத்தர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கண்டி மாநகரை நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்-

ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த தந்தச் சின்னம் வழிபாட்டுக்காக வைக்கப்படுவதாக ஸ்ரீ தலதா மாளிகை தியவதன

லாமல் அதிகாலையில் இருந்தே திறந்து வைக்கும்படி கண்டி மாநகர சபை கேட்டுள்ளது-

இதேவேளை 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கண்டி போகம்பரைத் திடலில் கொண்டாடப்படும்- அன்று மகளிருக்கென விசேட கண்காட்சி ஒன்றும் இடம்பெறும்-

[ல—ந—017]

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிக்கும் இடையிலான உடன் மாற்று விகிதம் 1990 மார்ச் 1 இல்.

100 அமெரிக்க டாலர் ரூ. 3998-50 ரூ 4001-50

வர்த்தக வங்கிகள் வழங்கும் தந்தி மூல பிறநாட்டு நாணய உடன் மாற்று விகிதம்; 1990 மார்ச் 1 இல்

| | | வாங்குதல் | | விற்றல் |
|---|---|---|---|---|
| 100 அமெரிக்க டாலர் | ரூ. | 3998-45 | ரூ | 4002-55 |
| 100 ஸ்டேர்லிங் பவுண் | ரூ. | 6684-38 | ரூ | 6715-03 |
| 100 ஜெர்மன் மார்க்ஸ் | ரூ. | 2333-56 | ரூ | 2349-68 |
| 100 பிரெஞ்சு பிராங் | ரூ. | 686-32 | ரூ | 697-41 |
| 100 ஜப்பான் யென் | ரூ. | 26-6267 | ரூ | 26-8796 |

பாவனையாளர்களுடன் வர்த்தக வங்கிகள் தந்தி மூல பிறநாட்டு நாணய மாற்றத்தைக் கடைப் பிடிக்கும் மத்திய வங்கி வாங்கும் விகிதம் ஆகக் குறைந்த வாங்கும் விகிதம்; ஆகக் கூடிய விற்கும் விகிதம்:

| | | | | |
|---|---|---|---|---|
| 100 வங்காளதேச டகாஸ் | ரூ. | 123-73 | ரூ | 124-18 |
| 100 பர்மா கியாட்ஸ் | ரூ. | 618-05 | ரூ | 620-49 |
| 100 இந்திய ரூபா | ரூ. | 234-27 | ரூ | 235-24 |
| 100 ஈரான் ரியால் | ரூ. | 56-98 | ரூ | 57-19 |
| 100 நேபாள ரூபா | ரூ. | 139-57 | ரூ. | 140-15 |
| 100 பாகிஸ்தான் ரூபா | ரூ. | 185-89 | ரூ | 186-66 |

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியீட்டு திதி 3 மார்ச் 1990-

DINAPATHI, 5, Gunasena Mawatha, Colombo 12 — P.O. Box 1613

# பத்திரிகையாளர் கொலையை வைத்து சிறிமா அரசியல் இலாபம் தேட முயற்சி

## ரஞ்சன் கண்டனம்

கொழும்பு, மார்ச்— 2

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பத்திரிகையாளர் ரிச்சட் டி சொய்ஸாவின் கொலையை வைத்து அரசியல் ஆதாயம் தேட முனைகிறார். என அமைச்சர் விஜேரத்ன கண்டனம் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் திருமதி பண்டாரநாயக்க ரிச்சட் டி சொய்ஸாவின் கொலை தொடர்பாக அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி உள்ளார், இது பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று நிருபர்கள் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவிடம் கேட்டனர்,

இக்கொலை தொடர்பாக இன்னும் நீதி விசாரணைகள் முற்றுப் பெறவில்லை, நீதி மன்றத்தின் முன்இருக்கும் ஒரு விடயத்தைப் பற்றி எவரும் வெளிப்படையாக அபிப்பிராயம் தெரிவிக்கக் கூடாது-

எனினும் திருமதி பண்டாரநாயக்கா இது பற்றி நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்துள்ளார், இது அரசியல் இலாபம் தேடி செய்த ஒரு செயலாகும் என அமைச்சர் கண்டனம் தெரிவித்தார், (ல-ய)

# மீன்பிடி படகில் மதுசாரம் கடத்தல்

## பொலீஸார் கைப்பற்றினர்

கொழும்பு, மார்ச்— 2

மீன்பிடிப் படகொன்றில் கடத்தப்பட்ட பெருந்தொகையான மதுசாரம் நீர்கொழும்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது-

வென்னப்புவையில் இருந்து மதுசாரத்தை ஏற்றிக் கொண்டு வந்த இப்படகு நீர்கொழும்பு வாவியை அடைந்த போது பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது-

இப்படகில் இருந்து கைப்பற்றப்பட்ட 900 போத்தல் மதுசாரத்தின் பெறுமதி 22ஆயிரத்து 500 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது,

இப்படகில் பிரயாணம் செய்த இருவர் கைது செய்யப்பட்டனர், (ல-032)

லயத்தில் நடைபெறும்,

வித்தியாலய அதிபர் ஜனாப் காதர் நைனா இக்கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார்,

பொலீஸ் தலைமையகத்தின் பொது மக்கள் நலத்துறை பகுதியைச் சேர்ந்த சார்ஜன்ட் திரு பாவனாசிவம், உதவி பொலீஸ் அதிபர் திரு அங்குணவல ஆகியோர் இங்கு கருத்துரை வழங்குவர்,

பாணந்துறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறப்பதிதியாகக் கலந்து கொள்வார்.

அல்பஹ்ரியா முஸ்லிம் மகா வித்தியாலய பெற்றோர் ஆசிரி

# தலா ரூ. 1000 நஷ்டஈடு

கொழும்பு, மார்ச்— 2

மதிய உணவாக வழங்கப்பட்ட பாலுணவு நஞ்சானதால் நோய்வாய்ப்பட்ட கொழும்பு நாரஹேன்பிட்டி வித்தியா வர்த்தன மகா வித்தியாலய மாணவர்களுக்கு மில்கோ நிறுவனம் நேற்று முன்தினம் காலை ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடாக வழங்கியது-

நோய்வாய்ப்பட்ட 58 மாணவர்களுக்கும் மேற்படி பாடசாலையில் வைத்து இந்த நஷ்டஈட்டுப் பணம் கையளிக்கப்பட்டது-

அத்துடன் நோயுற்ற மாணவர்களை அஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதற்கான செலவுத் தொகையாக பாடசாலைக்கு மேலும் ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

மில்கோ நிறுவனத்தின் சார்பில் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு கே பீ நிஹால் நந்த பொது முகாமையாளர் திரு வீ அர் டபிள்யூ சூரிய அராச்சி விசேஷ திட்ட முகாமையாளர் பி எல் பீரிஸ் கொழும்பு தெற்கு பிரதி கல்வி பணிப்பாளர் திரு நிமல் ரணதுங்க ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்- (ந-வ)




புனித

ரமழான் மாதத்தில்

உம்ரு யாத்திரை

செய்வோருக்கு-

★ செலவு சொற்பம்

★ திருப்திகரமான சௌகரியங்கள்

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

மக்கா

டிரவல் சேர்விஸ்

தொலைபேசி- 29654

MAKKAH TRAVEL SERVICE

— Air Ticketing Allied Services & Tour Operators —

147/1 Maliban Street, Colombo—11